விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 074 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 19 வியாழக்கிழமை (03.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## கொரோனா 23 பேர் பலி


(கொழும்பு)
கொரோனாத் தொற்றால் நாட்டில் மேலும் 23 பேர் உயிரிழந்துள்ளனர்.
இந் நிலையில், 15

## நாடு முழுவதும் எரிபொருள் நெருக்கடி உக்கிரம்
## வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)
நாடு முழுவதும் டீசல் கொள்வனவிற்கான நீண்டவரிசையை நேற்றுக் காணமுடிந்தது.
அதிகளவிலான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் இருக்கவில்லை என்பதுடன், சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குறைந்தளவில் எரிபொருள் இருந்தாலும் அதனை பெற்றுக் கொள்ள பல மணித்தி 15



### உக்ரைன் - ரஷ்யா போர் காரணமாக
## ஐ.நாவில் இலங்கை குறித்த விவாதம் ஒத்திவைப்பு



(ஜெனிவா)
இலங்கையின் மனித உரிமை நிலைவரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை மீது இன்று இடம்பெறவிருந்த விவாதம் பிற்போடப்பட்டுள்ளது.
உக்ரைனில் ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையினால் உருவாகியுள்ள நிலைமை குறித்து மனித உரிமை பேரவை அவசரமாக விவாதிக்கப்பட வேண்டிய நிலை காணப்படுவதாலேயே இலங்கை குறித்த கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது.
(15ஆம் பக்கம் பார்க்க)

### நாடு முழுவதும் இன்றும்
## 7½ மணித்தியால மின்வெட்டு அமுல்

(கொழும்பு)
நாடு முழுவதும் இன்றும் ஏழரை மணித்தியாலங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அறிவித்துள்ளது.
அதன்படி, அனைத்து பகுதிகளிலும் காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரையான 15

### யாழ்.போதனாவில்
## பிசிஆர் பரிசோதனை இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)
வெளிநாடு செல்வதற்காக யாழ். போதனா வைத்தியசாலையில் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர் பரிசோதனைகள் இன்று வியாழக் கிழமை இடைநிறுத்தப்படும் 15




### யாழ்.போதனா வைத்தியசாலையில்
## சிறுநீரக மாற்று சிகிச்சை வெற்றிகரமாக முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்.போதனா வைத்தியசாலையில் சிறுநீரக மாற்று சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கே.நந்தகுமாரன் அறிவித் 15

## ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி வேண்டும்
### ஐ.நா ஆணையாளரிடம் மல்கம் ரஞ்சித் கோரிக்கை

(ஜெனிவா)
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இலங்கை அரசின் விசாரணையில் நம்பிக்கை இல்லை. எமக்கு நீதி வேண்டும் என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரிடம் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)



## திருநெல்வேலியில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - பலாலி வீதியில், பரமேஸ்வரா சந்திப்பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.
இதில் கொக்குவில் கிழக்கு காளியம்மன் கோவில் பகுதியை சேர்ந்த விமலச்சந்திரன் நிதுசன் (வயது-26) என்பவரே உயிரிழந்தவராவார். 15

## உக்ரைனுக்கு முன் இலங்கையை ரஷ்ய அதிபர் புடின் தாக்கியிருப்பார்
### நளின் பண்டார தெரிவிப்பு



(கொழும்பு)
ரஷ்ய அரச தலைவர் விளாடிமிர் புடின், தன்னை இலங்கை அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவுடன் ஒப்பிடுவது தெரிந்திருந்தால், உக்ரைனை தாக் 15

## நவாலியில் வீடு புகுந்து வாள்வெட்டுத் தாக்குதல்
### ஒருவர் காயம்; ஒருவர் மடக்கிப் பிடிப்பு


(யாழ்ப்பாணம்)
நவாலிப் பகுதியில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் வீடு புகுந்த வாள்வெட்டுக்குழு நடத்திய தாக்குதலில் குடும் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை தம்பிராசா



பிறப்பு : 20.11.1938 இறப்பு : 01.03.2022

கிராமக்கோட்டடி ஆதி மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, பன்னாலையை வசிப்பிடமாகவும் தற்போது நீலாவத்தை, விழிசிட்டி வித்தகபுரத்தில் வசித்தவருமான சின்னத்துரை தம்பிராசா அவர்கள் நேற்று முன்தினம் (01.03.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புத்திரனும் காலஞ்சென்ற அப்பர் - செல்லம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னலச்சுமியின் அன்புக் கணவரும் தயாளினி (சுவிஸ்), தயாளன் (லண்டன்), தயாபரன் (சுவிஸ்), தயாமினி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலாகரன் (சுவிஸ்), ஸ்ரீதேவி (லண்டன்), கஜேந்தினி (சுவிஸ்), சற்குணராசா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் யுகன் (சுவிஸ்), நிலானி (சுவிஸ்), செந்துஜன் (சுவிஸ்), சாருஜன் (லண்டன்), சுஜித் (சுவிஸ்), ஹரினி (லண்டன்), ஜோதினி (சுவிஸ்), காலஞ்சென்ற லவப்பிரியா மற்றும் துவாரகா, வானுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் கிருத்திகனின் (சுவிஸ்) அன்புப் பூட்டனும் காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் சின்னத்தங்கம், பொன்னம்மா, காலஞ்சென்ற பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் சங்கரப்பிள்ளை, தம்பிராசா, சிவபாதநாயகி, இராசம்மா, சிவபாக்கியம், சோதிநாகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற அப்பையா, தேவகிருஷ்ணா ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.03.2022) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் நீலாவத்தை விழிசிட்டி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மயிலிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(10452)

நீலாவத்தை, விழிசிட்டி,
வித்தகபுரம், தெல்லிப்பளை.

077 840 8874

தகவல் :-
குடும்பத்தினர்

## நாட்டில் நேற்று மேலும் 751 பேருக்கு தொற்று

(கொழும்பு) நாட்டில் நேற்று மேலும் 751 பேர் கோவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. அதன்படி, நாட்டில் இதுவரை கோவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 647,699 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## நல்லூர் பிரதேச சபை
## பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

இடம் :
தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை
காலம் :
2022.03.16 புதன்கிழமை மு.ப 10.30 மணி
ஏலப்பொருட்கள் :
அபிவிருத்தி வேலையின்போது அகழப்பட்ட மண்

அபிவிருத்தி வேலைகளின்போது அகழப்பட்ட மண் ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது. ஆர்வமுள்ளோர் தலைமை அலுவலகத்தில் அனுமதி பெற்று அவை சேமிக்கப்பட்டுள்ள இடங்களில் ஏலப்பொருட்களை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். 2022.03.16 புதன்கிழமை மு.ப 8.30 மணி தொடக்கம் கட்டணம் செலுத்தி உரிய விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பித்து, சுகாதார விதிமுறைகளுக்கமைவாக ஏலத்தில் கலந்து கொள்ளலாம். சித்தி பெறும் ஏலதாரர் உரிய தொகையினை உடன் பணமாகச் செலுத்தவேண்டும்.

**திரு.ப.மயூரன்,**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**
**021 222 2700**

**2022.03.03**

(C-3887)

# மரண அறிவித்தல்

## இராமச்சந்திரன் சிவக்கொழுந்து



பிறப்பு : 1943.08.28 இறப்பு : 2022.03.02

புலோப்பளை மேற்கைப் பிறப்பிடமாகவும் மகேசன் வீதி, நவாலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட இராமச்சந்திரன் சிவக்கொழுந்து நேற்று (02.03.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரம் - தங்கம் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற கந்தையா - நாகி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராமச்சந்திரன் அவர்களின் பாசமிகு மனைவியும் கந்தசாமி, தர்மலிங்கம், பசுபதி, காலஞ்சென்ற கிளி, இராசம்மா, குணம், தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தங்கம்மா, காலஞ்சென்ற யோகேஸ்வரி, காலஞ்சென்ற தங்கவேலு, தங்கவேலு, சத்தியசீலன், மனோ, குகனேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சந்திரமலர், சந்திரகுமாரி, சந்திரவிமலா, விஜயகுமாரி, சுசிலகுமார், இலங்கேஸ்வரி, சுதாகரன், சந்திரஸ்ரீ ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயராசா, கொன்சன்ரைன், கருனேஸ்வரன், சிவனேஸ்வரன், அருளானந்தம், மதிவாணி, சர்மிளா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற இன்பராசா, ஜெயபுஷ்பானந்தன், விமலேஸ்வரன், நிரோஜன், வினோத், லிதுனா, கலிஸ்ரன், பிரதீபன், டேனுஜா, கனிஸ்ரன், நிஷானா, பிரணவாஸ், ஓவியன், நிகான், சஷ்மிக், கபிஸ், ஆர்ணவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் வர்சித், சகிந், பிரஜீனா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.03.2022) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 11.00 மணியளவில் கொத்துக்கட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(10453)

மகேசன் வீதி,
நவாலி வடக்கு.

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் இயலாமையின் வெளிப்பாடே இந்த எரிபொருள் தட்டுப்பாடு

## பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன்

(முறிகண்டி)

**அரசாங்கத்தின் இயலாமையையும், வலுக்குன்றிய நிலையையும், திட்டமிடப்படாத பொருளாதார சிந்தனைகளைக் கொண்ட இராணுவ சிந்தனைகளோடு மட்டுமிருக்கின்ற கோட்டாபயவின் தோற்றுப்போன மனநிலையை இந்த எரிபொருள் தட்டுப்பாடு உணர்த்தி நிற்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முற்பகல் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,நாட்டிலே உள்ள எரிபொருள் தட்டுப்பாடுகளினால் மக்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றனர்.

இயற்கை விவசாயத்திற்கு செல்லுங்கள் என ஒரே இரவிலேயே இந்த அரசாங்கம் அறிவித்ததன் காரணமாக இம்முறை அறுவடை மிகப்பெரும் பின்னடைவை சந்தித்திருக்கின்றது.

இதனால் ஏக்கருக்கு 50 மூடைகளை பெற்றுக்கொண்ட வயல் நிலங்களில் ஏக்கருக்கு 5, 7, 10 மூடைகளாகவே அறுவடை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை அடுத்து இயற்கை உரத்துடன் சிறுபோக செய்கையை மேற்கொள்வதற்கு உழுது தயாரான பொழுது இங்கு டீசல் தடையாக இருக்கின்றது.

இந்த அரசாங்கம் தோல்வியடைந்த அரசாங்கம். அவர்கள் தமிழ், சிங்கள மக்களை வதைத்து அதன் ஊடாக தமது குடும்ப நலனைக் கொண்டிருக்கின்ற ஒரு அரசாங்கமாக உள்ளது.

அந்தவகையில் இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள், கோட்டாபயவின் நடவடிக்கைகள் தமது பொருளாதாரத்தில் பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளதாக விவசாயிகள் சோகமான கதைகளை சொல்கின்றார்கள்.

தனியார் ஊடாக உரத்தினை இறக்குமதி செய்ய அனுமதித்துள்ளதாக அரசாங்கம் சொல்கின்ற பொழுதிலும், இங்கு தமிழ் மக்கள் உரத்தினை பெற்றுக்கொள்ளவோ அல்லது காணவோ முடியாத நிலையிலேயே உள்ளனர். ஆகவே இது மிகப்பெரிய பின்னடைவையும், இந்த மக்களிற்கு ஏமாற்றத்தையும் கொடுத்திருக்கின்றது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கிகளுடன் தாங்கள் பேசிக்கொண்டிருப்பதாகவும் நிதியமைச்சர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் நாங்கள் பேசமாட்டோம் என்று அவர்கள் பல தடவை கூறினார்கள். இப்பொழுது அந்த நிலைமையில் இருந்து இறங்கி வந்திருப்பது கூட அவர்களது இயலாமையின் அடுத்தகட்ட வெளிப்பாட்டைக் கொண்டு வந்திருக்கின்றது.



நாட்டில் இருக்கின்ற அனைத்து மக்களும் பொருளாதார ரீதியில் பெரும் பின்னடைவை சந்தித்திருக்கின்ற இந்த நேரத்தில் அவர்களின் மீட்சிக்கு இந்த அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க தவறினால் தாமாக இந்த அரசியல் நிலைமையை விட்டு விலகி மக்களின் வாழ்க்கைக்கான சரியான அரசை அமைத்துக் கொள்வதற்கும், ஒரு தீர்வை பெற்றுக் கொள்வதற்கும் இந்த அரசு வழியை திறந்து விட வேண்டும். இதுவே அனைவரினதும் விருப்பம் என அவர் தெரிவித்தார். (நி-100-312-315)

# பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை அங்கீகரிப்பதில் இலங்கை பின்னடைவு



(ஜெனீவா)

பொறுப்புக்கூறலை உறுதி செய்வது மற்றும் பாதிக்கப்பட்ட வர்களின் உரிமைகளை அங்கீகரிக்கும் செயற்பாடுக ளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தின் ஊடகப்பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக பெண்களால் பிரதிநிதித்துவப்படுத்தும் காணாமல்போனோரின் குடும்பங்கள் முகங்கொடுத்தி ருக்கும் பாதுகாப்பற்ற நிலை குறித்து தாம் அறிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறி க்கை குறித்து வெளியிடப்பட்டு ள்ள ஊடக அறிக்கையிலேயே ஊடகப்பேச்சாளர் ரவினா ஷம் தாசனி இதனை தெரிவித்துள்ளார்.

அத்தோடு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் இராணு வமயமாக்க்ல், இன-மதரீதியான தேசிய வாதம், சிறுபான மையினர் மத்தியில் அதிகரித்துள்ள பதற்றம் உள்ளிட்ட வற்றையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேலோ ங்கியிருக்கும் சிவில் சமூக அமைப்புக்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மீதான பாதுகாப்புத்தரப்பினரின் தொடர் கண்காணிப்பு மற்றும் மீறல்கள் குறித்தும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# கச்சாய் எண்ணெய் விலை 110 டொலரை தொட்டது

(வோஷிங்டன்)

கச்சாய் எண்ணெய் விலை உயர்வால் சர்வதேச அளவில் எல்லா நாடுகளிலும் பெற்றோல்-டீசல் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ரஷ்யா-உக்ரேய்ன் போர் காரணமாக கச்சாய் எண்ணெய் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

நேற்று அதிகாலை ஒரு பரல் கச்சாய் எண்ணெய் விலை 108 அமெரிக்க டொலராக இருந்தது. அதன் பிறகு தொடர்ந்து கச்சாய் எண்ணெய் விலையில் உயர்வு ஏற்பட்டது.

நேற்று முற்பகல் 10 மணி நிலவரப்படி ஒரு பரல் கச்சாய் எண்ணெய் விலை 110 டொலராக அதிகரித்தது. அதன் காரணமாக சர்வதேச அளவில் எல்லா நாடுகளிலும் பெற்றோல்-டீசல் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (நி)

# உத்தேச மிகை வரி சட்டமூலத்தில் இருந்து ETF,EPF உள்ளிட்ட 13 நிதியங்கள் நீக்கம்

(கொழும்பு)

உத்தேச மிகை வரி சட்டமூலத்தில் இருந்து ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் உள்ளிட்ட 13 நிதியங்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளன என சட்டமா அதிபர் உயர்நீதிமன்றுக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# இரண்டு வாரங்களுக்குள் புலமை பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

(கொழும்பு)

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் 2 வாரங்களில் வெளியாகும் என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் கடந்த ஜனவரி 31 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு பெப்ரவரி 5ஆம் திகதி வரை இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மரண அறிவித்தல்

## திருமதி.கலாஜினி சோமசுந்தரம்



தோற்றம்- 02.12.1958
மறைவு-23.02.2022

மடத்தடி, மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. கலாஜினி சோமசுந்தரம் அவர்கள் 23.02.2022 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார். அன்னார் காசிநாதர் சோமசுந்தரம் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும், அனுராஜ், அபிஷா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற இராசரத்தினம், சற்குணம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற காசிநாதர், சீதேவிப்பிள்ளை ஆகியோரின் மருமகளும், குகபாலன் (பிரான்ஸ்), மகாதேவன், பரந்தாமன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியுமாவார். இவரின் ஈமக் கிரியைகள் (04.03.2022) நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

மடத்தடி,
மாவிட்டபுரம் தெல்லிப்பளை.

தகவல்:
சகோதரன் இராசரத்தினம் மகாதேவன் (சிவன்)
(10443) T.P 077 059 4267

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.பி.எல் தொடரில் இருந்து ஜேசன் ராய் விலகல்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரரர் ஜாசன் ராயை ரூ.2 கோடிக்கு குஜராத் டைட்டன்ஸ் அணி ஏலத்தில் வாங்கியிருந்தது. இந்த நிலையில் 31 வயதான ஜேசன் ராய் இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல்.இல் இருந்து திடீரென விலகியுள்ளார். கட்டுப்பாடுகளுடன் கூடிய கொரோனா தடுப்பு பாதுகாப்பு வளையத்தில் நீண்ட நாட்கள் இருப்பது சோர்வை ஏற்படுத்தும் என்பதால் இந்த முடிவுக்கு வந்திருப்பதாக அவர் குஜராத் அணி நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளார்.

## சி.பி.எல். கிரிக்கெட் தொடரில் வடக்கின் வல்லூறுகள் மகுடம்





வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கிடையே நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் தொடரில் வடக்கின் வல்லூறுகள் அணி சம்பியனானது.

வருடாந்தம் நடைபெறும் சி.பி.எல். எனப்படும் கூட்டுறவு பிறிமியர் லீக்கின் நான்காவது தொடர் அரியாலை சன சமூக நிலைய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. மட்டுப்படுத்தப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இந்த தொடரின் ஏ பிரிவில் முல்லை முத்துக்கள், கிளிநொச்சி கில்லிகள் ஆகிய அணிகளை வீழ்த்திய வடக்கின் வல்லூறுகள் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. அரையிறுதியில் யாழ். யாளிகள் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு வடக்கின் வல்லூறுகள் முன்னேறியது.

பி பிரிவில் முதல் சுற்றுப் போட்டிகளில் யாழ். யாளிகள், வவுனியா வைரங்கள் அணிகளைத் தோற்கடித்து அரையிறுதிக்குத் தகுதிபெற்ற மன்னார் மன்னர்கள் அணி, முல்லை முத்துக்கள் அணியை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது.

பரபரப்பான இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மன்னார் மன்னர்கள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. துடுப்பெடுத்தாடிய வடக்கின் வல்லூறுகள் அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 விக்கெட் இழப்புக்கு 41 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிருசாந் 13 ஓட்டங்களையும் பிரதீஸ்குமரன் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். பந்து வீச்சில் நிசாந்தன் 2 விக்கெட்களையும் குருபரன் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மன்னார் மன்னர்கள் அணி 3 விக்கெட் இழப்புக்கு வெறும் 32 ஓட்டங்களையே பெற்று 9 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் நிசாந்தன் 14 ஓட்டங்களையும் பாலரவி 11 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

பந்து வீச்சில் பிரதீஸ்குமரன் 2 விக்கெட்களையும் பவள்ராஜ் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக பிரதீஸ்குமரனும், தொடராட்ட நாயகனாகவும் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் வடக்கின் வல்லூறுகளின் செல்வரஞ்சனும் தொடரில் சிறந்த பந்து வீச்சாளராக மன்னார் மன்னர்களின் நிசாந்தனும் தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றிபெற்ற அணிகளுக்கான கிண்ணங்களையும் பணப் பரிசில்களையும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மு.நந்தகோபாலன் வழங்கி வைத்தார். (ம)


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
## பகிரங்க ஏலவிற்பனை

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகங்களில் பாவித்த போட்டோக்கொப்பி இயந்திரம், உழவியந்திர பற்றறி, ரயர், கண்ணாடிப் போத்தல், இரும்பு, பழைய பத்திரிகை மற்றும் அலுவலக உபகரணப் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளன.

**இடம்** : உப அலுவலகம்; புலோப்பளை, பளை.
**திகதி** : 15.03.2022
**காலம்** : மு.ப 10.00 மணி

### நிபந்தனைகள்:

- ஏலதாரராக கலந்துகொள்பவர் ரூபா 100.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்துவதுடன் ரூபா 500.00 மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக செலுத்த வேண்டும்.
- சித்தியடைந்த ஏலதாரர் அன்றையதினமே ஒப்புக்கொண்ட ஏலத் தொகையின் முழுத் தொகையினையும் செலுத்தி பொருட்களை அலுவலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.
- உரிய பொருட்களை பார்வையிட விரும்புவோர் மற்றும் மேலதிக விபரங்களை பெற விரும்புவோர் அலுவலக கடமை நேர நாட்களில் காலை 8.30 முதல் மாலை 4.15 வரை தொடர்புகொள்ளலாம்.
- மேலதிக நிபந்தனைக்கு கட்டுப்படுதல் வேண்டும்.
- தற்கால சூழ்நிலையை கருத்தில் கொண்டு ஒழுகுதல் வேண்டும்.

**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

**02.03.2022**

(C-3886)


# மரண அறிவித்தல்

## கந்தசாமி அற்புதராணி

**தோற்றம் : 19.01.1950 மறைவு : 02.03.2022**



சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி அற்புதராணி அவர்கள் நேற்று (02.03.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரட்ணம் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசையா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமியின் (உரிமையாளர் - கீதா ஜுவலர்ஸ், சாவகச்சேரி) அன்பு மனைவியும் சுஜாதாயினி (கனடா), ஜீவகாந்தன் (கனடா - கீதா ஜுவலர்ஸ்), ஜீவகீதா (சுவிஸ்), கௌசிகா (ஆசிரியை - வீரசிங்கம் மத்திய கல்லூரி), கோமகன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதாகரன் (கனடா), ராதிகா (கனடா), சதீஸ்குமார் (சுவிஸ்), கஜீபன் (ஆசிரியர் - யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), திவ்யா (நில அளவை அலுவலகம் - கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜனனி, ஜனோஷன், அக்ஷயா, கனிஷ்டா, கஜன், காயத்திரி, கயானன், சஞ்சய், கிருத்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தங்கராஜா, கோகுலராணி, சண்முகராஜா மற்றும் நடராஜா, நவரட்ணம், கணேசமூர்த்தி, தயாபரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.03.2022) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (10456)

சங்கத்தானை,
சாவகச்சேரி.

077 304 9893

தகவல்:-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாப்பிட வழியில்லாமல் நாட்டில் யாரும் இல்லை

## அமைச்சர் ஜோன்ஸ்டன் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சாப்பிட இல்லாத மக்கள் என யாரும் இந்த நாட்டில் இல்லை என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பு -ஹொரண வீதியின் 120 இலக்க பேருந்து மார்க்கத்தை விரிவுபடுத்தும் போது வீடுகளை இழந்தவர்களுக்கு, புதிய வீடுகளுக்கான திறப்புகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சீமெந்து பிரச்சினை இருப்பதை ஏற்க வேண்டும். ஆனால், மகிந்த யுகத்தின் பின்னர் அதிக அபிவிருத்தி நடைபெறுவது இந்த யுகத்தில் தான்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் பின்னர் அதிகமான வீதிகள் கோட்டாபய ஆட்சியிலேயே நிர்மாணிக்கப்படுகிறது.

தனியார் துறையினர் அதிக கட்டுமானத்தை முன்னெடுத்தது மகிந்த ஆட்சியில் தான். அதைவிட அதிகமாக தற்போது நடக்கிறது.

வீதிகளை மேம்படுத்தும் போது அவர்களின் காலத்தில் செய்ய முடியாமல் போனதையிட்டு அவர்களுக்கு கவலை ஏற்படுகிறது. இதுதான் உண்மை நிலை." எனக் குறிப்பிட்டுள்ளார். (நி)

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16 . 08 . 1939

மறைவு 25 . 02 . 2020

## அமரர்.விஸ்வலிங்கம் நாகேஸ்வரி

எம் முன்னே வாழ்ந்த தெய்வம் மறைந்து
ஆண்டிரண்டு ஆனதம்மா!
பொன்னும் பொருளும் கொட்டிக் கொடுத்தாலும்
பெற்றவள் அன்புபோல் வருமா?
நம்மைப் பெற்றவளின் தாய் மடியைத் தருமா??
கருப்பைக்குள்ளிலிருந்து நாம் காலால் உதைத்தபோது
விருப்புற்று எம் பாதம் முத்தமிட்ட தாயே!
உடலில் சுமந்து உயிரை பகிர்ந்து
உருவம் கொடுத்த உயிரே!
இரவெல்லாம் விளக்காய் விழித்திருந்து
எமக்காய் ஊண் உறக்கம் துறந்து
மகிழ்ந்திருந்தாய் அம்மா
நீங்கள் இல்லாமல் அரண்மனையாய் இருந்தாலும்
அநாதையாய் தவிக்கின்றோம்
அடிமுடி அறியமுடியாத அற்புதமே!
தாலாட்டி சோறூட்டி வளர்த்த சொற்பதமே!
தினம் தொழுகின்றோம் உங்கள் பொற்பாதமே
இன்மைக்கும் ஏழேழு பிறவிக்கும்
அன்போடு எமை ஆழ்வாய்
என்றென்றும் எழிலோடு எம் நெஞ்சிலே நீங்கள் வாழ்வீர்கள் அம்மா!
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.


(10430)

கும்பிளாவளை மேற்கு,
அளவெட்டி மத்தி, அளவெட்டி.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சரவணமுத்து



மண்ணில்- 18.02.1931
விண்ணில்- 01.03.2022

நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஓய்வு நிலை தபாலதிபர் கணபதிப்பிள்ளை சரவணமுத்து அவர்கள் 01.03.2022 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான கணபதிப் பிள்ளை- அபிராமி தம்பதியரின் மகனும், காலம் சென்ற தன லட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு, நாகலிங்கம், அருணாசலம், சிவநாகம்மா ஆகியோரின் இளைய சகோதரரும்,

சாரதாலட்சுமி, சாந்தினி (ஆசிரியை நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை), சரோஜினி (காப்புறுதி ஆலோசகர், யூனியன் அஷ்யூரன்ஸ்) சத்தியதேவி (தாதிய உத்தியோகத்தர் யா/போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 02.03.2022 பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று இவரது பூதவுடல் நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(10441)

தகவல்:
குடும்பத்தினர்.

# இராசிபலன்

03.03.2022
மாசி 19, வியாழக்கிழமை
பிரதமை முன்னிரவு 11.08 மணிவரை

பூரட்டாதி பின்னிரவு 3.25 மணிவரை
சுபநேரம் - 7.57-9.27 மணிவரை
இராகுகாலம் -1.57-3.27 மணிவரை

சந்திராஷ்டமம்-
ஆயிலியம்

வள்ளவன்

**மேஷம்** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்** எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப் புண்டு, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**மிதுனம்** உங்களின் கடின முயற்சியை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்** கடவுளை வழிபட்டு அமைதி காண வேண்டிய நாள், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்** மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், சொந்த பந்தங்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, களஸ்திர நன்மையுண்டு.

**கன்னி** எதிர்ப்பாக இருந்தவர்கள் இணக்கத்துடன் நடந்து கொள்வர், கூட்டு முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் [illegible] காரிய அனுகூலமுண்டு.

**துலாம்** பிள்ளைகளின் கல்வி நலனில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் முன்னேற்றம் கருதி அதிக பிரயாசை எடுக்கும் நாள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள்.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**தனுசு** பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், செய்தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்** மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம் பெறலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பால் சிந்தை மகிழ் வீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** தேவையற்ற விவகாரங்களில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி சிறையில் உள்ள கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரிக்கை

(அராலி)

2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கைது செய்யப்பட்டு திருச்சி சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கை கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி கைதிகளின் உறவினர்கள் நேற்று இந்திய துணைத் தூதரகத்தின் யாழ். அலுவலக தூதுவரிடம் எழுத்து மூலமான கோரிக்கை ஒன்றினை முன்வைத்தனர்.

இது தொடர்பாக கைதிகளின் உறவினர்கள் தெரிவிக்கையில், தண்டனை காலம் முடிவடைந்தும் எமது உறவினர்கள் திருச்சி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நூற்றிற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அதில் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் கடவுச்சீட்டு இல்லை என்ற காரணத்திற்காக கைது செய்யப்பட்டவர்கள்.

எனவே தண்டனை காலம் நிறைவடைந்த அவர்களை விடுதலை செய்யுமாறு கோரி, இந்திய துணைத்தூதரகத்தின் யாழ். அலுவலக தூதுவரிடம் கடிதம் ஒன்றினை கையளித்துள்ளோம். எமது உறவுகளை விடுதலை செய்வதற்கு உரியவர்களுடன் கலந்துரையாடி அதற்கு வழி சமைப்பதாக தெரிவித்துள்ளார் என்றனர். (4-6-104)

# ஆஸ்பத்திரி வீதி அகழிப்பு தொடர்பில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியின் அகழிப்பு தொடர்பான கலந்துரையாடல் கடந்த 28 ஆம் திகதி யாழ்.பொது நூலகத்தில் மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாண பிரதேச செயலாளர், தேசிய நீர்வழங்கல் அதிகார சபை அதிகாரிகள், நகரத் திட்டமிடல் அதிகார சபை அதிகாரிகள், இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை தொலைத் தொடர்பு திணைக்கள அதிகாரிகள் யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தினர் , வர்த்தகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் வாகனத்தரிப்பிடம், பொதுமக்களுக்கான நடைபாதை மற்றும் வடிகால் ஆகிய அம்சங்களுடன் யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதியினை அகழிந்து மீள் அமைப்பது தொடர்பான செயற்றிட்டம் இறுதி செய்யப்பட்டது. அத்துடன் குறித்த பணிகளினை நாளை 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. (4-6-33)

# ஈஸ்டர் தாக்குதல், ரஷ்யா-உக்ரேயன் போர் தமிழர் விவகாரத்தை ஸ்தம்பிதமடைய செய்யும்

## சிறிதரன் எம்.பி சுட்டிக்காட்டு

(முறிகண்டி)

அமெரிக்காவில் இரட்டை கோபுரம் மீதான தாக்குதல், இந்தியாவிலே செங்கோட்டை மீதான தாக்குதல் ஆகியன போன்று இன்று உக்ரேயன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் தமிழ் மக்களின் பிரச்சினைகளை பின்நோக்கி தள்ளுமா என்ற அச்சத்தை தோற்றுவித்துள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.


கிளிநொச்சியில் அவரது அலுவலகத்தில் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே மேற்கண்ட விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் இரண்டு வகையான இராஜதந்திர அடிகளை வாங்கிக்கொண்டிருக்கின்றோம். அதில் ஒன்று பேராயர் மல்கம் ரஞ்சித் ஏப்ரலில் 21 பிரச்சினையை புதாகாரமாக வெளியில் காட்டி அதனை அவர் கொண்டு செல்வது தமிழர்களின் பிரச்சினை மனித உரிமை பேரவையில் 2 ஆம் 3 ஆம் இடத்திற்கு தள்ளப்படுவதற்கான ஆபத்தை தற்பொழுது சந்தித்திருக்கின்றது. இரண்டாவதாக இன்று உலக வல்லரசாக இருக்கின்ற ரஷ்யா உக்ரேயினுடன் தொடுத்திருக்கின்ற போர் அமைகின்றது.


இப்பொழுதும் நாங்கள் பேசும் பொருளாக, இன அழிப்பு செய்யப்பட்டமை தொடர்பில் சொல்லப்படுகின்றபொழுது, கவனங்கள் வேறு திசைக்கு விக்கப்படுகின்றன. உலகம் ஜனநாயகத்தையும், ஒற்றுமையையும் விரும்புகிறதென்றால் அல்லது ஐக்கிய நாடுகள் சபை என்று ஒன்று இருக்கின்றது என்றால் அவர்களால் 12 வருடங்களாக கொண்டுவரப்பட்ட இந்த மனித உரிமை விடயங்களை தூக்கித்தள்ளிப்போட முடியாது. இதற்கு நீதி வழங்கியாக வேண்டும்.

இப்பொழுதும் அதில் கரிசனை செலுத்துகின்றார்கள் என்பதை அண்மைநாட்களாக வருகின்ற செய்திகளில் நாங்கள் பார்க்கின்றோம். இன்று 3ம் திகதி இலங்கை தொடர்பான விவாதம் ஜெனிவாவிலே நடைபெறுவதாக இருந்தது. அது பிற்போடப்பட்டு நாளை வெள்ளிக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஆகவே அங்கு கைவிடப்படவில்லை. விடயங்கள் கையாளப்படுகின்றன. ஆனால் வெளியிலிருந்து பார்க்கின்ற ஆய்வாளர்கள், செய்தியாளர்கள், ராஜதந்திரிகளின் பார்வை உக்ரேயனை தான் பார்க்க வைக்கின்றது என தெரிவித்தார். (4-6-100)



நல்லூர்சிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி பூஜை வழிபாடுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இவ் பூஜை வழிபாட்டில் நூற்றுக்கணக்கான பக்த அடியார்கள் கலந்து கொண்டனர். (படம்: சிவசாந்தன்)



மகா சிவராத்திரியை முன்னிட்டு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணி முதல் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை வரை யாழ்.நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் எழுந்தருளியுள்ள சிவதெட்சணாமூர்த்தி திருக் கோவிலில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றதுடன் அரண்மனை வளாகத்தில் அமைந்துள்ள 108 சிவலிங்கங்களுக்கும் அடியவர்கள் தங்கள் கரங்களால் அபிஷேகம் செய்தும் மெய்யுருக வழிபட்டனர். (படம்: ரவிசாந்)

# மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவிற்கு எதிராக விரைவில் போராட்டம்

## வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளர்

(யாழ்ப்பாணம்)

பிரதேச அபிவிருத்திகளின் போது யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் செயற்பாடுகள் எல்லை மீறி செல்வதை தடுப்பதற்கும் மக்களின் எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்து கொடுப்பதற்குமாக யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் அனைவரும் இணைந்து பேசி விரைவில் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்னால் உள்ளூராட்சி மன்றங்கள் ஒன்றிணைந்து போராட்டம் ஒன்றை மேற்கொள்ள எதிர்பார்த்திருப்பதாக சுன்னாகம் பிரதேச சபையின் தவிசாளர் கே.தர்சன் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் செயற்பாடுகளால் பிரதேச சபையை மையப்படுத்திய மக்கள் பிரதிநிதிகள் புறக்கணிக்கப்படுவதாகவும் மக்களின் நலன்கள் அனைத்தும் மக்களின் விருப்புக்கமைவான தெரிவுகளாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தலைமையில் சில உறுப்பினர்கள் வலி தெற்கு பிரதேச செயலகம் சென்று பிரதேச செயலாளர் முகுந்தனுடன் கலந்துரையாடல் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (4-6-33)

# நாட்டில் அரசியல் தீர்வு ஒரு போதும் கிடைக்காது

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு முழுமையான நிலைப்பாட்டை கட்சிகள் வெளிப்படுத்தாத காரணத்தால் நாங்கள் ஜெனிவாவுக்கு தனியாக கடிதம் எழுதவேண்டிய தேவை ஏற்பட்டதாக தமிழ் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

கட்சிகள் ஒவ்வொன்றும் தனியாக ஜெனிவாவிற்கு கடிதம் எழுதியமை தொடர்பாக வல்வெட்டித்துறையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். தமிழ் மக்களது முழுமையான நிலைப்பாட்டை கட்சிகள் வெளிப்படுத்தாத காரணத்தால் நாங்கள் தனியாக ஜெனிவாவுக்கு கடிதத்தினை அனுப்பியுள்ளோம். ஒரே நிலைப்பாட்டில் கட்சிகள் இருக்குமானால் ஜெனிவாவுக்கு பல்வேறு கடிதங்கள் போக வேண்டிய தேவையிருக்காது.

இலங்கைக்குள் அரசியல் தீர்வு ஒரு போதும் கிடைக்காது. ஒற்றையாட்சியை விட்டு ஒரு அங்குலமும் அரசாங்கம் வழங்காது. அரசியல் தீர்வு வழங்கப்படும். ஆனால் கூட ஒற்றையாட்சியை மலினப்படுத்துவதாக அந்த தீர்வு இருக்காது.

சர்வதேச நாடுகள் மற்றும் சர்வதேச சமூகம் இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒரு பொதுசன வாக்கெடுப்பை நடத்த வேண்டும். அதுவே அரசியல் தீர்வுக்கான வழி என்பதை நாங்கள் இறுக்கமாக வலியுறுத்தி இருக்கின்றோம் என தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவில் இலங்கைக்கு களங்கம் ஏற்படாது

## நீதியமைச்சர் அலிசப்ரி நம்பிக்கை

(கொழும்பு)

**ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு களங்கம் ஏற்படாது என தாம் நம்புவதாக நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**



கொழும்பு ஊடகம் ஒன்றிடம் பேசிய போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். ஆரம்பத்தில் இருந்தே குறித்த மாநாடு ரஷ்யாவிற்கும் உக்ரேய்னுக்கும் இடையிலான இராணுவ நிலைமையை மையமாகக் கொண்டுள்ளது.

எனினும், ஜெனிவா மாநாட்டில் இலங்கை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் நாளை மறுதினம் சனிக்கிழமை கலந்துரையாடப்படும்.

இந்த புகார்களுக்கு எதிராக வெளிவிவகார அமைச்சர் உரிய பதிலளிப்பதற்கு தயார் இருப்பினும் இந்த புகார்களின் தன்மையைப் பார்க்கும் போது அவை எங்களை கடுமையாக பாதிக்காது.

ஜெனிவா மாநாட்டு அதிகாரிகள் இலங்கையில் மட்டுமன்றி உலகம் முழுவதிலும் உள்ள நிலைமையை உணர்ந்துள்ளனர்.

ரஷ்யாவுக்கும் உக்ரேய்னுக்கும் இடையிலான போர்ச் சூழல் இன்று பெரிய தலைப்பாக மாறியிருப்பதே காரணம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## பெலாரஸில் உள்ள

# இலங்கை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்

### மொஸ்கோவிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு பிரதமர் பணிப்பு

(கொழும்பு)

ரஷ்யாவுக்கும் உக்ரேய்னுக்கும் இடையிலான யுத்த நிலைமைக்கு மத்தியில் பெலாரஸில் உயர்கல்வி கற்கும் இலங்கை மாணவர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மொஸ்கோவிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பெலாரஸ் அரச பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் சுமார் 1500 இலங்கை மாணவர்களின் பெற்றோர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களுடன் கலந்துரையாடி சில வாரங்கள் கல்விப் பணிகளை தமாதிப்பது குறித்தும் அவர்களுக்கு இலங்கைக்கு செல்வதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பிரதமர் ஆலோசனை வழங்கினார். (நி)

# பூஸ்டர் பெறாத பெற்றோர்களின் பிள்ளைகளே தொற்றால் அதிகம் பாதிப்பு

## விசேட மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ள பெரும்பாலான சிறுவர்களின் பெற்றோர்கள் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் என்று கொழும்பு தேசிய சிறுவர் மருத்துவமனையின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிறுவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பெருமளவிலான சிறுவர்களின் பெற்றோர்களும் இதுவரை பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் எனத் தகவல் கிடைத்துள்ளது.

பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாத பெற்றோர்கள் மூலம் பிள்ளைகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று நோய் தொற்றுவது அதிகம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறான பெற்றோர்களில் சிலர் ஒரு தடுப்பூசியையாயினும் இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். (நி)

## எரிபொருள் நெருக்கடி தீவிரம்

# மெழுகுதிரி ஏற்றி சுற்றுலாத்துறையை மேம்படுத்த முடியாது- சம்பிக்க

(கொழும்பு)

நாடு வங்குரோத்து நிலைமையினை அடைந்துவிட்டது. நாட்டில் டொலருமில்லை, ரூபாவுமில்லை. மெழுகுவர்த்தி ஏற்றி சுற்றுலாத் துறையை மேம்படுத்த முடியாது என்பதை ஆட்சியாளர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், எரிபொருள் நெருக்கடி நாளுக்கு நாள் தீவிரமடைந்து செல்கிறது. எரிபொருள் பற்றாக்குறை காரணமாக மின்னுற்பத்தி நிலையங்களின் நடவடிக்கை பாதிக்கப்பட்டதால் தினசரி நாடுதழுவிய ரீதியில் மின்விநியோகம் துண்டிக்கப்படுகிறது.

டொலர் நெருக்கடி தீவிரமடைந்துள்ள காரணத்தினால் அரச நிறுவனங்களுக்கு கடன் வழங்குதலை அரச வங்கிகள் மறுத்துள்ளன. அத்தியாவசிய பொருள் இறக்குமதி பாதிக்கப்பட்டுள்ளது. மருந்து பொருட்களின் இறக்குமதியை அரசாங்கம் மட்டுப்படுத்தியுள்ளது. விவசாயத் துறை பாதிக்கப்பட்டுள்ளதால் நாட்டின் உணவு பாதுகாப்பு கேள்விக்குள்ளாகியுள்ளது. எதிர்வரும் காலங்களில் பாரிய நெருக்கடியை முழுநாடும் எதிர்கொள்ள நேரிடும் என சம்பிக்க தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
கி.பா: 10 சூரி, செவ் 4 இல் உயரம் :180 cm
தகைமை/தொழில்:Bachelor Degree Station Master, Railways (அரசதொழில்)
எதிர்பார்ப்பு:உள்நாடு சைவம் மட்டும்
தொ.இ: B/12373

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்:ஆயிலியம் 3
கி.பா: 26 சூரி 5 செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பிரான்ஸ் PR உண்டு
இந்தியா வந்து திருமணம் செய்யலாம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12375

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 1
கி.பா : 67 சூரி 5 செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பிரான்ஸ்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
உள்நாடு மட்டும்
தொ.இ: B/12380

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
கி.பா: சூரி, செவ் 10 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12381

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: திருகோணம் 4
கி.பா: சூரி 11 செவ் 1 இல் உயரம்:5'6'"
தகைமை/தொழில்: BBA பட்டதாரி MBA Following DO
எதிர்பார்ப்பு: யாழ்ப்பாணம் கொழும்பு
நிரந்தர தனியார் அரச உத்தியோகம்
தொ.இ:G/12428

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்:அவிட்டம் 2
கி.பா: 63 ½ சூரி 7 செவ் 8 இல்
தகைமை/தொழில்: முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: அரசதொழில் அல்லது வெளிநாடு
தொ.இ:G/12430

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 21 சூரி 9 செவ் 6 இல் உயரம்:5'6"
தகைமை/தொழில்: அரச மருந்தாளர்
எதிர்பார்ப்பு: அரசதொழில்
தொ.இ:G/12431

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 3
கி.பா:32 சூரி 7 செவ் 8 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, தனியார், அரசதொழில் அல்லது வெளிநாடு
தொ.இ:G/12437

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைபேசி மூலம்
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



REGISTER NOW !

Hotline
0710 770 770,
0717 140 000

Registorad with TVEC
TERTIARY AND VOCATIONAL EDUCATIN COMMISSION
Approved by: Foreign Ministry

நிச்சயமான தொழிலை இலக்காகக் கொண்ட பாட நெறி
O/L பின் SCHOOL OF NURSING
ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி



உள்நாட்டு வெளிநாட்டு தொழில் வேலை வாய்ப்புக்கள் அதிகளவில்
பெற்றுத் தர ஒரே ஒரு தாதியர் பாடசாலைக்கு புதிய மாணவர்களை சேர்த்துக்
கொள்ளப்பட உள்ளனர் நுழைவுக்கான அடிப்படைத் தகைமைகள்
- க.பொ.த. சா/த 5 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.
- உயரம் 4அடி 10 அங்குலம் இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 16 – 30 நகு இடைப்பட்டிருத்தல்.

(10442)

பயிற்சி நெறியினை சிறந்த முறையில் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு TVEC நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

நாடு முழுவதிலும் அமைந்துள்ள ஆய்வுகூட உதவியாளர் வெற்றிடங்களை நிரப்பும் முகமாக.....

A/L பின் MEDICAL LABORATORY TECHNOLOGY ASSISTANT
ஆய்வுகூட உதவியாளர் பயிற்சி நெறி
க.பொ.த. உயரதர விஞ்ஞான பாடத்திற்கு தோற்றிய நீங்களும் இப்பொழுது ஆய்வுகூட உதவியாளராகலாம்.



பிரதான காரியாலயம்
அய்வா தாதியர் பாடசாலை
PV 114302
28, பார் வீதி, மட்டக்களப்பு 071 872 2353, 065 222 9666
Web : www.myhopegroup.com E-mail : nadheer1976@yahoo.com

கிளைகள்

| திருகோணமலை | யாழ்ப்பாணம் | முல்லைத்தீவு |
| --- | --- | --- |
| 203, பிரதான வீதி, திருகோணமலை<br>071 992 6681 | 154, A/12, 2ம் மாடி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.<br>071 872 2350, 071 770 770 | P.W.D Road, Vannankulam, Mullaitivu.<br>077 171 0172, 075 286 8472<br>071 872 2352 |

wahts app மூலமும் தகவலைப் பெற்றுக் கொள்ளலாம். 0717 140 000


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## செல்வந்தர்கள் இந்தியாவில் அதிகரிப்பு




(டில்லி)

இந்தியாவில் பணம் படைத்தவர்களின் எண்ணிக்கை கடந்த வருடத்தில் மாத்திரம் 11 சதவீதம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நைட் பிராங்க் என்ற சொத்து ஆலோசனை நிறுவனம் உலக அளவில் சொத்து விபர அறிக்கையை தயாரித்துள்ளது.

குறித்த அறிக்கையில், 3 கோடி டொலர் மற்றும் அதற்கு மேல் நிகர சொத்து மதிப்பு கொண்ட தனிநபர்களை பெரும்பணக்காரர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவில் கடந்த 2020 ஆம் ஆண்டு 12 ஆயிரத்து 287 ஆக இருந்த பணக்காரர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 13 ஆயிரத்து 637 ஆக அதிகரித்தது. ஒரே ஆண்டில் 11 சதவீதம் உயர்ந்துள்ளது.

இந்தியாவில் பெங்களூர் முதலிடத்திலும், அதனைத் தொடர்ந்து டில்லி, மும்பை ஆகிய இடங்களும் இடம் பிடித்துள்ளன. பங்குச்சந்தையின் வளர்ச்சியும், டிஜிற்றல் புரட்சியும்தான் இந்தியாவில் பெரும் பணக்காரர்கள் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணங்கள் என்று 'நைட் பிராங்க்' நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஐரோப்பிய யூனிய

## விண்ணப்பத்தை ஏ

(பிரஸ்ஸல்ஸ்)

**ஐரோப்பிய யூனியனின் உறுப்பு நா ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என ஐ ளுமன்றம் அறிவித்துள்ளது.**

27 நாடுகள் அடங்கிய ஐரோப்பிய யூனியனில் இணையும் முயற்சிகளில் உக்ரேயன் ஈடுபட்டு வந்தது.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த ரஷ்யா, அந்நாடு மீது போர் தொடுத்துள்ளது.

இதையடுத்து உக்ரேய்ன் விடுத்த

## ரஷ்யா-உக்ரேய்ன் போரில் இந்திய மாணவன் உயிரிழப்பு

(டில்லி)

ரஷ்யா-உக்ரேய்ன் இடையிலான போரில் கர்நாடக மாநிலத்தை சேர்ந்த மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உக்ரேய்ன் கார்கீவ் நகரத்தில் உள்ள மருத்துவ கல்லூரி ஒன்றில் படித்து வந்த கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த நவீன் சேகரப்பா என்கிற மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து ரஷ்யா மற்றும் உக்ரேய்னில் சிக்கியுள்ள இந்தியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு இருநாட்டு தூதுவர்களிடமும் இந்தியா சம்மன் அனுப்பியுள்ளது.

அதேநேரம் கீவ் நகரில் சிக்கியுள்ள இந்தியர்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு அங்குள்ள இந்திய தூதரகம் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## கெர்சன் நகர் கைப்பற்றப்பட்டது

### ரஷ்ய இராணுவம் அறிவிப்பு



(கீவ்)

உக்ரேய்னின் மற்றொரு நகரமான சுமி மீதும் ரஷ்யா விமானப்படை ஷெல் குண்டுகள் பொழிந்து தாக்கி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரேய்ன் ரஷ்யா இடையே நேற்று 7 ஆவது நாளாக போர் நடந்து வருகிறது. உக்ரேய்னின் 2 ஆவது பெரிய நகரமான கார்கிவ் மீது ரஷ்யா தீவிர தாக்குதலை தொடங்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் உக்ரேய்னின் மற்றொரு நகரமான சுமி மீதும் ரஷ்யா விமானப்படை ஷெல் குண்டுகள் பொழிந்து தாக்கி வருவதாகவும் மற்றொரு தகவலும் வெளியாகியுள்ளது. இந்நிலையில் உக்ரேய்ன் நாட்டின் கெர்சன்நகர் முழுமையாக கைப்பற்றப்பட்டுள்ளதாக ரஷ்ய இராணுவம் அறிவித்துள்ளது. இதனை கெர்சன் நகர் ஆளுநரும் உறுதிப்படுத்தியுள்ளார். (நி)

## கார்கிவ் ந


## 21 பேர் ப



(கீவ்)

கிழக்கு உக்ரேய்ன் நகரமான கார்கிவ் நகரில் நேற்று முன்தினம் நடந்த ஷெல் தாக்குதலில் சுமார் 21 பேர் உயிரிழந்ததுடன்,

## கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த மகா காளேஷ்வரர் ஆலயம்



(டில்லி)

மத்திய பிரதேசத்தில் உள்ள மகா காளேஷ்வரர் ஆலயம் கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்து சாதனை படைத்துள்ளது.

மகா சிவராத்திரியை முன்னிட்டு மத்திய பிரதேசத்தில் உள்ள மகா காளேஷ்வரர் ஆலயத்தில், 11 இலட்சத்து 71 ஆயிரம் அகல் விளக்குகள் ஏற்றப்பட்டு கின்னஸ் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

சிவ ஜோதி அர்ப்பணம் மஹோற்சவம் என்ற பெயரில் நடைபெற்ற இந்த நிகழ்வை முதலமைச்சர் சிவராஜ்சிங் சவுகான் ஆரம்பித்து வைத்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான தன்னார்வலர்கள் அகல் விளக்குகளை ஏற்றி வைத்துள்ளனர். இந்த நிகழ்வை 5 பேர் அடங்கிய கின்னஸ் குழுவினர் நேரில் பார்வையிட்டு அங்கீகரித்து சான்றிதழ் அளித்துள்ளனர். (நி)

## ரஷ்யா-உக்ரேய்ன் தாக்குதல் தீவிரம் ரயில் நிலையத்தில் குவியும் மக்கள்

(கீவ்)

உக்ரேய்னின் பல்வேறு நகரங்களிலும் ரஷ்ய படையினரின் தாக்குதல் தீவிரமடைந்துள்ள நிலையில் அங்கிருந்து பிற நாடுகளுக்கு அடைக்கலம் தேடிச் செல்வதற்காக ரயில் நிலையங்களில் ஆயிரக்கணக்கானோர் குவிந்துள்ளனர்.

உக்ரேய்னில் ரஷ்யப் படையினரின் [illegible] துள்ளதால் நகரங்களை விட்டுப் பொதுமக்கள் சாரை சாரை



யாக வெளியேறிச் செல்கின்றனர். (நி)

## சிரி

## 11



(டமாஸ்கஸ்)

சிரியாவில்

விபத்தில் சிக்கி

தீ விபத்துக்கா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ரியனில் இணைகிறது உக்ரேய்ன்
# ...ஏற்றது ஐரோப்பிய பாராளுமன்றம்

### ... நாடாக உக்ரேய்ன் ...ன ஐரோப்பிய பாரா

கோரிக்கையை அடுத்து ஐரோப்பிய யூனியன் நாடுகள் ஆயுதங்கள் வழங்க சம்மதம் தெரிவித்துள் ளன.



இந்த நிலையில், ஐரோப் பிய யூனியனில் இணை வதற்கான விண்ணப்பத்தில் கடந்த திங்கட்கிழமையன்று உக்ரேய்ன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கையெழுத்திட் டார்.

தொடர்ந்து ஐரோப்பிய பாராளுமன்றத்தில் காணொளி மூலம் அவர் பேசியதாவது.

உக்ரேய்ன் மக்கள் வலி மையானவர்கள். நாங்கள் தனித்து விடப்பட்டுள்ளோம். நீங்கள் எங்களோடு இருப் பதை நிரூபியுங்கள்.

எங்களை போக விட மாட் டீர்கள் என்பதை நிரூபியு ங்கள். நீங்கள் உண்மை யிலேயே ஐரோப்பியர்கள் என்பதை நிரூபியுங்கள். அப்போதுதான் மரணத்தை வாழ்க்கை வெல்லும் என தெரிவித்தார்.

அவரது உரை முடிந்த வுடன் அங்கிருந்த உறுப் பினர்கள் கைதட்டி பலத்த கரகோஷம் எழுப்பினர்.

இதையடுத்து ஐரோப்பிய யூனியனின் உறுப்பு நாடாக உக்ரேய்னின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தாக ஐரோப்பிய பாராளுமன் றம் அறிவித்துள்ளது. (நி)

# ...நகர ஷெல் தாக்குதலில்
# ...பலி, 112 பேர் காயம்





112 பேர் காய மடைந்துள்ளனர் என்று பிராந்திய ஆளுநர் ஒலெக் சினெகுபோவ் நேற்று தெரிவித் தார்.

ரஷ்ய ஏவுகணைத் தாக்குதல்கள் உக்ரேய்னின் இரண்டாவது பெரிய நகரத்தின் மையத் தைத் தாக்கியதாக அதிகா ரிகள் தெரிவித்தனர்.

இதனால் குறித்த பகுதியில் அமைந்துள்ள குடியிருப்புகள் மற்றும் பிராந்திய நிர்வாகக் கட்டடங்கள் உள்ளிட்டவை பலத்த சேதங்களுக்குள்ளா கியுள்ளன. (நி)

## அமெரிக்க வான் பரப்பில் ரஷ்ய விமானங்கள் நுழைய தடை

(வோஷிங்டன்)

அமெரிக்க வான் பரப்பில் ரஷ்ய விமானங்கள் நுழை யத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனை அமெரிக்க ஜனாதி பதி ஜோ பிடன் உறுதி செய் தார். ஐரோப்பிய நாடுகளும் கன டாவும் ஏற்கனவே ரஷ்யாவில் இருந்து வரும் விமானங்கள் தங்கள் வான் பரப்பில் நுழை யத் தடை விதித்துள்ளன.

இந்நிலையில் ரஷ்யாவுக்கு சொந்தமான அல்லது ரஷ்யாவால் இயக்கப்படும் விமானங்களுக்கு அமெரிக்கா தடை விதித்துள் ளது. ரஷ்யாவில் இருந்து அமெ ரிக்கா வரவேண்டிய சில விமா னங்கள் ஏற்கனவே இரத்து செய் யப்பட்டுவிட்டன. ஏற்கனவே பொரு ளாதாரத்தடைகளை எதிர்கொண் டுள்ள ரஷ்யா, இந்தத் தடை மூலம் மேலும் தனிமைப்படுத் தப்படும் என ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவித்துள்ளார். (நி)

## உக்ரேய்ன் மீதான படையெடுப்புக்கு புடின் மட்டுமே பொறுப்பு

### ஜோ பிடன் எச்சரிக்கை



(வோஷிங்டன்)

உக்ரேய்ன்மீதான படையெ டுப்புக்கு ரஷ்ய ஜனாதிபதி விளா டிமிர் புடின் மட்டுமே பொறுப்பு என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவித்துள்ளார்.

தீவிரமடையும் உக்ரேய்ன்- ரஷ்ய மோதல் தொடர்பில் வோஷிங்டனில் பேசிய அவர் இதற்காக புடின் நீண்ட கால விளைவுகளை சந்திக்க நேரி டும் எனவும் எச்சரித்துள்ளார்.

பெரும் முதலாளிகளாலும், வன்முறை நிறைந்த ஆட்சி யாளர்களாலும், ஊழல் அதி காரிகளாலும் ரஷ்ய ஆட்சி தாங்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் ஐரோப்பிய பங்கா ளிகளுடன் இணைந்து தங்க ளது சொகுசுக் கப்பல்கள், ஜெட் விமானங்கள், சொகுசு சொத்துக்களை பறிமுதல் செய் யப்போகிறோம்.

தவறான வழியில் சம்பா தித்த உங்கள் இலாபத்தை நோக்கியே நாம் வருகிறோம் என ஜோ பிடன் தெரிவித்தார்.

எந்தெந்த ரஷ்யப் பெரு முதலாளிகள் மீது தடை விதி க்கப்பட்டது என்ற பட்டியலை அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் ஏற்கனவே வெளி யிட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி)

# ...ரியாவில் வணிக வளாகத்தில் தீ விபத்து
# 11 பேர் தீயில் கருகிப் பலி



(...ஸ்கஸ்)

...ாவில் வணிக வளாகத்தில் ஏற்பட்ட தீ ... சிக்கி 11 பேர் பலியாகி உள்ள நிலையில் ...துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின் றனர்.

சிரியா நாட்டின் தலைநகர் டமாஸ்கஸில் 6 மாடி கொண்ட வணிக வளாக கட்டடம் உள் ளது. இங்கு திடீரென தீ விபத்து ஏற்பட்டது. தீ மளமளவென கட்டடம் முழுவதும் பரவி யது.


அப்போது வணிக வளா கத்தில் இருந்த பலர் உள்ளே சிக்கிக் கொண்டு வெளியே வர முடியாமல் தவித்த னர்.

இதுபற்றி அறிந்த தீய ணைப்பு படையினர் விரை ந்து சென்று தீயை அணைக் கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

ஆனாலும் தீ விபத்தில் சிக்கி 11 பேர் இறந்தனர். பலர் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டு உள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் என்னவென்று தெரியவி ல்லை. இதுகுறித்து விசா ரணை நடைபெற்று வருகி றது. (நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



## வவுனியா மருத்துவமனையில்

## சுகாதார தொழில் சங்கத்தினர்

# வேலைநிறுத்தப் போராட்டம்

(நெளுக்குளம்)

**வவுனியா மருத்துவமனையில் நிறைவுகாண் மருத்துவ சேவையினர் மற்றும் துணை மருத்துவ சேவையினருமாகிய 18 தொழிற்சங்க கூட்டமைப்பினர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**

இதன் காரணமாக நோயாளர்கள் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

நேற்று முதல் 2 நாட்களுக்கு மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கைளை முன்னெடுக்கவுள்ளதாக சுகாதாரத் தொழிற்சங்க சம்மேளனம் அறிவித்திருந்தது.

சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட தங்களது கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கு அரசாங்கம் இதுவரையில் நடவடிக்கை எடுக்காமை காரணமாக இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் கிளினிக் சேவைகள், இரத்த பரிசோதனைகள், கதிரியக்க சேவைகள் மற்றும் மருந்தகம் போன்ற பல்வேறான சேவைகள் இயங்காமையினால் நோயாளர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

கடந்த மாதம் 7 ஆம் திகதி முதல், 9 நாட்களுக்கு தாதியர் உள்ளிட்ட 18 சுகாதாரத் தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பு நடவ்டிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-299)


## பொலிஸ் காவலரண் திறந்து வைப்பு




(குருமபுரம்)

கிளிநொச்சி பரந்தன் நகரப் பகுதியில் அண்மைக்காலமாக இரவு வேளைகளில் பல்வேறு வகையான குற்றச் செயல்கள், கொலை மற்றும் ஆள் மிரட்டல் திருட்டுச்சம்பவங்கள்என பல்வேறு விதமான சட்டவிரோத செயல்கள் இடம்பெறுவதால் நேற்று பரந்தன் நகரப் பகுதியில் கிளிநொச்சி பொலிஸாரால் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டது. குறித்த காவலரண் 24 மணி நேரமும் செயற்படும் எனவும் இதன்மூலம் சட்டவிரோத செயல்கள் கட்டுப்படுத்த முடியும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (4-6-316)

## மாட்டுவண்டி சவாரி



(குருமபுரம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு தொட்டிலடி மாட்டு வண்டி சவாரி திடலில் நேற்று முன்தினம் மாட்டுவண்டி சவாரி இடம்பெற்றது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இருந்து 45 இற்கு மேற்பட்ட காளைகள் இப்போட்டியில் பங்குபற்றின. வெற்றி பெற்ற காளைகளின் உரிமையாளர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. (4-6-316)

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் அராலி மத்தி, கணவத்தை பகுதி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இராவணா ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இவ்வாறு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்: கஜிந்தன்)



# ஒப்பந்தகாலம் முடிந்தும் நிறைவடையாத பாலம்



(தருமபுரம்)

கண்டாவளை பகுதியில் உள்ள பாலம் ஒன்று ஒப்பந்த காலம் நிறைவடைந்தும் கட்டுமானப்பணிகள் இன்னமும் நிறைவடையவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

கண்டாவளை பிரதேச செயலகத்திற்கு அருகில் எள்ள A-35 பிரதான வீதியில் உள்ள பாலத்தில் கடந்த 2020.05.11 ஆம் திகதி புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2021.11.07 ஆம் திகதி நிறைவுறும் என தெரிவிக்கப்பட்டது.

இருந்த போதிலும் தற்போது வரை கட்டுமானப்பணிகள் நிறைவடையவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவித்தனர்.

எனவே உரிய அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து பாலத்தின் கட்டுமானப் பணியை பூரணப்படுத்தி தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-6-316)

## பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு ஒருவழிப்பாதையாக மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் ஆண்டின் பட்டமளிப்பு விழா இன்று, நாளை, நாளை மறுதினம் நடைபெறவிருப்பதால் இக்காலங்களில் காலை 8 மணிமுதல் மாலை 3.00 மணிவரை சேர் பொன்.இராமநாதன் வீதியின் ஒருபகுதி ஒருவழிப்பாதையாக மட்டும் அமையும்.

அதற்கமைய கலட்டி சந்தியிலிருந்து பரமேஸ்வரா சந்திக்கு வரும் பாதை ஒரு வழிப்பாதையாகவே இயங்கும். இக்காலப்பகுதியில் பரமேஸ்வரா சந்தியூடாக எவ் வாகனங்களும் உட்புக முடியாது என யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன் அறிவித்துள்ளார். (4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 220 | 220 | 300 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 360 | 500 |
| தக்காளி | 300 | 240 | 240 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 90 | 80 |
| கோவா | 100 | 100 | 120 | 120 |
| கரட் | 250 | 250 | 380 | 400 |
| பூசணி | 140 | 140 | 140 | 150 |
| புடோல் | 160 | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 100 | 100-300 | 200 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 120-170 | 160 |
| பாகற்காய் | 400 | 500 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 180 | 220 | 170 | 280 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 150 | 400 | 250 | 350 |
| லீக்ஸ் | 130 | 100 | 170 | 200 |
| பீற்றூட் | 180 | 150 | 220 | 200 |
| கறிமிளகாய் | 350 | 300 | 350 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 1300 | 1000 | 1400 |
| போஞ்சி | 240 | 250 | 140 | 320 |
| கத்தரிதம்புள்ள | 200 | 180 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 100 | 100 |
| தேசிக்காய் | 120 | 140 | 140 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 150 | 180 | 180 |
| வெங்காயப்பூ | 140 | 90 | 150 | 250 |
| முள்ளங்கி | 50 | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | -- | 100 | 80 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வந்தர்களுக்கான வரிச்சலுகையே டொலர் தட்டுப்பாட்டிற்கு காரணம்

(கொழும்பு)

**அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின் செல்வந்தர்களுக்கு வரிச்சலுகை வழங்கியதன் காரணமாகவும் அரச வருமானம் குறைந்துள்ளது.இதுவே தற்போதைய டொலர் தட்டுப்பாட்டுக்கு முக்கிய காரணம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டினார்.**

நாட்டில் நிலவும் உண்மை நிலையை பொதுமக்கள் நன்கு உணர்ந்துள்ளனர் என அவர் சுட்டிக்காட்டினார்.

அதிகாரிகளின் உதவியுடன் சிலர் பாதுகாக்கப்பட்ட காணிகளை சுவீகரிக்க முயற்சிப்பதாகவும் வனப் பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் இதுபோன்ற சட்டவிரோத செயல்களை ஒருபோதும் அனுமதிக்கவோ அல்லது மன்னிக்கவோ மாட்டோம் என்றும் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார். (நி)



# புகையிரத சேவைகளும் மட்டுப்படுத்தப்படும்

## புகையிரத சாரதிகள் சங்கம்

(கொழும்பு)

புகையிரத போக்குவரத்துச் சேவைக்கான எரிபொருள் விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டால் பயணிகள் புகையிரத சேவை மட்டுப்படுத்தப்படும்.

எதிர்வரும் 5 நாட்களுக்கு தேவையான எரிபொருள் மாத்திரமே கையிருப்பில் உள்ளது என புகையிரத சாரதிகள் சங்கத்தின் செயலாளர் இந்திக தொடங்கொட தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ள பின்னணியில் புகையிரத சேவைக்கும் அதனால் பாதிப்பு ஏற்படும்.எரிபொருள் பற்றாக்குறை நிலைமைக்கமைய புகையிரத சேவையை சிறந்த முறையில் முன்னெடுத்து செல்வது சவால்மிக்கது.

பயணிகள் புகையிரத போக்குவரத்து சேவைக்கு மாத்திரம் ஒரு நாளைக்கு 1 இலட்சம் லீற்றர் டீசல் தேவைப்படுகிறது.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் புகையிரத சேவையை முன்னெடுத்துச் செல்லவேண்டு மாயின் எதிர்வரும் நாட்களில் காலை மற்றும் மாலை அலுவலக புகையிரத சேவைகளை தவிர்த்து ஏனைய புகையிரத சேவைகளை தற்காலிகமாக இரத்து செய்யுமாறு புகையிரத திணைக்கள பொதுமுகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி)

# தமிழினப் படுகொலைகளை நினைவூட்டும் உக்ரேய்ன் அழிவுகள்

## கனேடிய தமிழர் தேசிய அவை

(ஒட்டாவா)

2009 ஆம் ஆண்டு தமிழ் இனப்படுகொலையின் உச்சக் கட்டத்தில் தமிழர்கள் அனுபவித்த துயரங்களை உக்ரேய்ன் பேரழிவுகள் நினைவூட்டுவதாக கனேடிய தமிழர் தேசிய அவை தெரிவித்துள் ளது.

இலங்கை அரசாங்கத்தாலும் அதன் இரக்கமற்ற ஆயுதப் படைகளாலும் படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகள் மற்றும் நண்பர்கள் பற்றிய மிகவும் வேதனையான நினைவுகளை உக்ரேய்னில் வெளிவரும் இந்த பேரழிவு சூழ்நிலைகள் தமிழ் மக்களுக்கு மீண்டும் நினைவூட்டுகின்றன.

உக்ரேய்னில் கடந்த சில நாட்களாக நடந்து வரும் சம்பவங்கள் நெஞ்சை பதறவைக்கின்றன. உக்ரேய்னிய மக்களின் துன்பங்களும் மரணமும் கற்பனை செய்யமுடி யாதவை. இது மிகவும் கவலையளிக்கிறது. இந்த நேர த்தில் உக்ரேய்னிய மக்களுடன் எங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்துகிறோம்.

உக்ரேய்னில் இனப்படுகொலைக்கு திட்டமிடுவதாக குற்றம் சாட்டி ரஷ்யா மீது உக்ரேய்ன் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்துள்ளது.

உக்ரேய்ன் ஜனநாயக அரசு மற்றும் அதன் மக்கள் மீதான ரஷ்ய அரசாங்கத்தின் வலிந்த தாக்குதல் கடுமையாகக் கண்டிக்கப்பட்டு நிறுத்தப்பட வேண்டும் எனவும் கனேடிய தமிழர் தேசிய அவை தெரிவித்துள்ளது. (நி)

# சஜித் அணியினரும் ஜெனிவா பயணம்

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் நடைபெற்று வருகின்றது. இம் மாநாட்டுக்கு இணையாக அரச சார்பற்ற நிறுவனங்களின் ஏற்பாட்டில் உப மாநாடு களும் நடத்தப்பட்டு வருகி ன்றன.

இம் மாநாட்டில் பங்கேற்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்ணான்டோ மற்றும் மனுச நாணயக்கார ஆகியோர் நேற்று ஜெனிவா நோக்கிப் பயணமாகினர்.

சிறைத் தண்டனை அனுபவித்துவரும், ரஞ்சன் ராமநாயக்கவை விடுவித்துக் கொள்வதே இவர்களின் பயணத்தின் பிரதான நோக்கமாக உள்ளது என எதிரணி தகவல்கள் தெரிவிக்கின்றன.(நி)

# இன்று ஒரு தகவல்

## பிறந்த வீடும் புகுந்த வீடும்

தான் வைத்ததுதான் சட்டம். மாமியாருடன் சண்டை, நாத்தனாருடன் பேச்சு வார்த்தையில்லை. மைத்துனர்களுடன் சுவட்டு நாட்டு இல்லை. புகுந்த வீட்டிற்கும் பிறந்த வீட்டிற்கும் இடையே சுமுகமான உறவு இல்லை. கணவனை அவன் தாயிடமிருந்து பிரித்த இரக்கமற்ற செயல். தாய் வழிச் சொந்தத்துடன் மட்டும் நல்லுறவு அல்லது அடியோடு மாறிவிட்டாள் என்ற குற்றச்சாட்டு.

இவை ஒரு பெண்ணிற்குப் பெருமையா சேர்க்கும்? ஒருக்காலும் இல்லை.

திருமணமான ஒரு பெண் தன் கணவனைவிட அவனது தாயையே பெரிதும் கவர்ந்து இழுத்துக் கைக்குள் போட்டுக் கொள்ள வேண்டும். இந்த அடிப்படை உண்மையை உணர்ந்த பெண்கள் நற்பெயருடன் காலத்தை ஓட்டுகிறார்கள்.

அதை நினைத்துக் கணவன் வெளியில் விரும்பாதது போல் காட்டிக் கொண்டாலும் உள்ளூர மிகவும் விரும்புவான்.

மாறாகக் கணவனைக் கைக்குள் போட்டுக் கொண்டு விட்டு மாமியாரைப் பொருட்படுத்தாமல் நடந்து கொள்ளும் பெண்களுக்கு மனக்கஷ்டம் ஒன்றே மிஞ்சும்.

பிறந்தகத்துடன் சம்பந்தப்பட்டவர்களை ஒரு விதமாகவும், புகுந்தகத்துடன் சம்பந்தப்பட்டவர்களை வேறு விதமாகவும் நடத்துவதாக இரு வழியினரும் குறை கூறாதபடி பார்த்துக் கொண்டால் அதுவும் நற்பெயருக்கு வழி வகுக்கும்.

புகுந்த வீட்டைப் பற்றிப் பிறந்த வீட்டிலும், பிறந்த வீட்டைப் பற்றிப் புகுந்த வீட்டிலும் விரும்பத்தகாத விடயங்களெல்லாம் காதில் விழும். கண்டும் காணாமல் இருப்பதை விட்டுவிட்டு, இங்கே சொல்வதை அங்கே சொல்வது, அங்கே சொல்வதை இங்கே சொல்வது, என ஆரம்பித்து விட்டால் அதன் விளைவுகள் சமாளிக்க முடியாததாய் ஆகிவிடும். சொல்லித்தான் ஆக வேண்டும் என்கிற சூழ்நிலை உருவான பின்பும்கூட மிகைப்படுத்தாமலும் முடிந்தால் அடக்கியும் சொல்ல வேண்டும்.

மாமியார், மாமனார், நாத்தனார், மைத்துனன் ஆகியோரிடம் காணும் நற்குணங்களை மட்டுமே சுற்றியிருப்பவர்களிடம் சொல்ல வேண்டும். நேரிடையாகப் பாராட்டுவது என்பது முகஸ்துதி என்றும், ஐஸ் என்றும் பட்டங்கள் சூட்டப்பட்டு எடுபடாமல் போய்விட மேற்கூறிய முறை மட்டும் பெரும் வெற்றியைத் தரும். ஒரு தாய்க்குத் தன் மகள் புகுந்த வீட்டில் நன்கு நடத்தப்படுகிறாளா? அவள் மகிழ்ச்சியுடன் இருக்கிறாளா என்பதைப் பற்றி மட்டுமே அதிக அக்கறை.

ஒரு மாமியாருக்குத் தன் மருமகள் தன்னை மதிக்கிறாளா, தன்னைப் பற்றி உயர்வான கருத்து வைத்திருக்கிறாளா குடும்பப் பொறுப்புகளை அக்கறையுடன் மேற்கொள்கிறாளா என்பது பற்றியே மிகுந்த அக்கறை; மற்றவையெல்லாம் அவளுக்கு இரண்டாம் பட்சம்.

இவற்றையெல்லாம் திருமணமான ஒரு பெண் உணர்ந்து வைத்திருப்பதோடு அதன்படி செயற்படவும் செய்தால் அவளால் அனைவருக்கும் மனமகிழ்ச்சியைத் தரமுடியும். எல்லாவற்றிற்கும் மேலாக –

புகுந்த வீட்டிற்கும் பிறந்த வீட்டிற்கும் இடையே உறவுப் பாலமாக செயற்படவும் ஏதுவாக இருக்கும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலி மாமா கதைகள்

## விதியை மீற முடியுமா?



ஒரு ஊரில் சின்னப்பன் என்ற மாடு மேய்க்கும் சிறுவன் இருந்தான். அவன் தினமும் காலையில் எழுந்து தன் எஜமானனான பெரிய பண்ணையாரின் ஆடு, மாடுகளை ஓட்டிக் கொண்டு மேய்க்கப் போவான். அந்த கிராமத்தை அடுத்து சற்றுத் தூரத்தில் பரந்த வெளி இருந்தது.

ஒரு காலத்தில் அங்கு அடர்ந்து வளர்ந்த மரங்கள் இருந்தன. ஆனால் இப்போதோ அங்கு ஆங்காங்கே பசுமை இருந்தது. அதுவும் ஏதேதோ செடி கொடிகள் முளைத்திருந்தன. புல்லும் ஏராளமாக வளர்ந்திருந்தது.

அங்குதான் அவ்வூராரின் ஆடு, மாடுகளைச் சிறுவர்கள் ஓட்டிப் போய் மேய விடுவார்கள். அவர்கள் அங்கு விளையாடித் திரிந்துவிட்டு மாலையானதும் ஆடு, மாடுகளை ஓட்டிக் கொண்டு வீட்டிற்குத் திரும்பிச் செல்வார்கள்.

ஒருநாள் சின்னப்பன் வழக்கம் போல ஆடு, மாடுகளை ஓட்டிக் கொண்டு அந்தப் பரந்த வெளிக்குப் போனான். ஆனால் அன்று ஏதோ ஒரு பண்டிகை நாள். அதனால் மற்ற சிறுவர்கள் வரவில்லை. சின்னப்பனுக்கு அப் பண்டிகை நாள் பற்றி நினைவே இருக்கவில்லை. தனியாக இருந்த அவன் தன் ஆடுகளையும் அங்கும் இங்கும் விரட்டி அடித்து ஓட வைத்துக் கொண்டிருந்தான்.

அப்போது திடீரென ஒரு பறவை எங்கிருந்தோ வந்து அவன் மீது விழுந்தது. அவன் அதைச் சட்டெனப் பிடித்து அதன் கழுத்தை நெரித்துக் கொன்றான். அதன் உடலைப் பிளந்து அந்த இரு பாகங்களையும் தூக்கி ஒரு புதர் மீது விட்டெறிந்தான். அவை அங்குள்ள இலைகள் மீது பட்டதும் ஒன்று சேர்ந்து உயிர் பெற்று உயரப் பறந்து போயிற்று.

சின்னப்பன் அதைக் கண்டு மலைத்து நின்றான். அவன் ஓடிப் போய் அந்த இடத்தைப் பார்த்தான். அங்கு ஒருவகை இலைகளைக் கொண்டு செடிகள் அடர்ந்து வளர்ந்திருந்தன.

அந்த இலைகளின் சக்தியால்தான் அந்தப் பறவைகள் உயிர் பெற்றிருக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. அந்த இலைகள் சஞ்சீவினி இலைகளாகத்தான் இருக்க வேண்டும் என அவன் எண்ணினான். அதையும் பரீட்சித்துப் பார்க்கலாம் என நினைத்து அவன் அங்குமிங்கும் தேடி இறந்து கிடந்த பறவை ஒன்றை எடுத்து அந்த இலைகளின் மீது போட்டான். அது மறு விநாடியே உயிர் பெற்று பறந்து போயிற்று.

மறுநாள் அவன் தன் நண்பர்களைப் பார்த்த போது தான் கண்ட சஞ்சீவினி இலைகளைப் பற்றி சின்னப்பன் கூறினான். அதைக் கொண்டு தானே இறந்த பிராணிகளை உயிர்ப்பித்ததாகவும் கூறினான்.

ஆனால் அவனது நண்பர்களோ அதைக் கேட்டுச் சிரித்தார்கள். அதனால் அவன் கோபம் கொண்டான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்

30



"இவர்கள் வில்களில் எது ஆற்றல் உடையது? என்று வினா எழுப்பினர். தங்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கின்றனர்" என்பதை அறிந்து கொண்டு அவர்கள் தம் கேளிக்கையை நிறுத்திக் கொண்டனர். போரைத் தவிர்த்து அமைதி காட்டினர்.

சிவதனுசு கைமாறி இறுதியில் சனகன் வசம் வந்து சேர்ந்தது; மாலின் வில் சமதக்கினி முனிவரிடம் ஒப்புவிக்கப்பட்டது; பின்பு அவர் மகன் பரசுராமன் அதற்கு வாரிசு ஆயினான். மாலின் வில் தன்னிடம் இருப்பதால் அவன் தருக்கித் திரிந்தான்.

பரசுராமன் பல மன்னர்களைப் புற முதுகிடச் செய்தவன்; மூத்தவன் தவத்தில் தலை சிறந்தவன்; ஆணவம் மிக்கவன்; அவன் பெயரைச் சொன்னாலே அரசர் நடுங்கினர்; அவன் முன் வராமல் ஒடுங்கினர். இராமன் வில்லை முறித்த ஒலி விண் வரை எங்கும் அதிர்ந்து சென்றது. இப்பேரொலியைக் கேட்டுப் பரசுராமன் கிளர்ந்து எழுந்தான்; சிவதனுசினை முறித்து இராமன் அங்கு இருப்பதை உணர்ந்தான் 'அவனை வழியில் மடக்கி இடக்கு செய்வது, என்று முடிவுக்கு வந்தான்'. மணம் முடித்து அயோத்தி திரும்பும் வழியில் அவனை நிறுத்தித் தன்னோடு போருக்கு அழைப்பது என்று முடிவெடுத்தான். மழுப் படை ஏந்திய இராமன் பரசுராமன்; விற்படை ஏந்தியவன் கோதண்டராமன்; படைக் கருவிகளால் இவர்கள் வேறுபடுத்தி உணரப்பட்டனர். இராமன் அயோத்தி திரும்பினான். சுற்றமும் படைகளும் சூழத் தேர் ஏறி வந்து கொண்டிருந்தான், மழுப்படை ஏந்திய இராமன் வழி பறிக் கொள்ளையன் போல் குறுக்கே வந்து நின்றான்.

"இவன் யார்? ஏன் இங்கு வந்தான்?" என்பது இராமனுக்கு விளங்கவில்லை. தசரதன் முதியோன் ஆதலின், அவன் சரிதம் அறிந்தவனாய் இருந்தான். அவன் க்ஷத்திரியர் பகைவன்; அவர்களை வேர் அறுத்துப் போர் செய்தவன் என்பதை அறிந்தான். "அடப் பாவி! நீயா?" என்று குரல் கொடுத்து அலறிவிட்டான்; அவன் முன் தான் நிற்க முடியாது என்பதால் அலறி விழுந்தான்; நாப் புலர உயிர்ப்பிச்சை கேட்டான்.

இந்தக் கிழவனைப் பரசுராமன் ஓர் எதிரியாக ஏற்கவில்லை; மறுபடியும் சாதிவெறி அவனைத் தலைக் கொள்ளவில்லை. மத வெறி அவனை மடுத்தது; சிவதனுசா? மாலின் வில்லா? உயர்ந்தது? என்பது தலைக் கொண்டது; அற்பச் சிறுவன் சொற்பவில்லை சொகுசாக வளைத்து விட்டான். மாலின் வில்லைக் கண்டு அவன் மலைவது உறுதி" என்று நம்பினான்.

தசரதனுக்குப் பரசுராமனை எதிர்க்கத் துணிவு இல்லை. எங்கே தன் மகனைப் பகையாக்கித் தம் வாழ்வை நகையாக்கி விடுவானோ? என்று திகைத்தான் செயல் மறந்து நினைவு இழந்து மயக்கமுற்றுத் தரையில் விழுந்து விட்டான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எனும் அகப்பற்றை அறவே துறந்து உலகை மறந்து அருள் நெறியில் சிறந்து விளங்க வேண்டும். - அமுதவாக்கு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழர்களுக்கு சிங்களவராகவும் சிங்களவர்களுக்கு பௌத்தராகவும்

ஆன்மிகத் தலைவர்கள் என்போர் கடவுளின் பிரதிநிதிகள் என்று மதிக்கப்படுபவர்கள்.

எனவே ஆன்மிகத் தலைவர்களிடம் - மத குருமாரிடம் வர்க்க பேதமைக்கு அறவே இடமிருக்கக்கூடாது.

ஆம், உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியவுடன் தாக்குதலை நிறுத்துங்கள் எனக் கோரிக்கை விடுத்தவர் புனித பாப்பரசர் பிரான்சிஸ்.

தனது கோரிக்கையை வலிமைப்படுத்தும் வகையில் வத்திக்கானில் இருக்கக்கூடிய ரஷ்யத் தூதரகத்துக்கு நேரில் சென்று உக்ரைன் மீதான தாக்குதலை நிறுத்துங்கள் எனக் கோரினார்.

புனித பாப்பரசர் ஒருவர் இவ்வாறு தூதரகம் சென்று போரை நிறுத்துமாறு கேட்டது இதுவே முதற்தடவை என்பதற்குள்; புனித பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் மனித உயிர்களைப் பாதுகாப்பதைத் தனது திருப்பணியாகக் கருதினார் என்பதை உணர முடியும்.

தவிர, முன்பும் ஒரு தடவை தென் சூடானின் ஆட்சித் தலைவர்களைச் சந்தித்தபோது அந்த நாட்டுத் தலைவர்களின் காலைப் பணிந்து உள்நாட்டு யுத்தத்தை நிறுத்துங்கள் என்று புனித பாப்பரசர் கேட்டபோது, இந்த உலகமே நெகிழ்ந்து போனது.

ஆம், உண்மையான திருத்தந்தை சமயத்தின் பேரால், இனத்தின் பேரால் மக்களைப் பாகுபடுத்தமாட்டார்.

மனித அவலம் ஏற்படாமல் இவ்வுலகம் இன்புற்றிருக்க வேண்டும் என்று நினைத்துச் செயலாற்றுவதுதான் ஆன்மிகத்தின் பணி.

இதனையே *எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதேயன்றி வேறொன்றும் அறியேன் பராபரமே* என்றார் தாயுமான சுவாமிகள்.

ஆக, புனித பாப்பரசரின் அந்த இறை அன்பு அவரின் கீழ் இருக்கக்கூடிய திருச்சபையினர் பலரிடம் இல்லை என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

உண்மை, இலங்கையின் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இப்போது வத்திக்கானுக்குச் சென்று புனித பாப்பரசரைச் சந்தித்துள்ளார்.

இச்சந்திப்பைத் தொடர்ந்து ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகரையும் அவர் சந்தித்துள்ளார்.

இச்சந்திப்புகளின் நோக்கம் ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி விசாரணை வேண்டுமென்பது தான்.

நல்லது, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் இதுவரை முழுமையான விசாரணைகள் இடம்பெறவில்லை.

எனவே அது விடயத்தில் சர்வதேசத்தின் உதவியை நாடுவது பொருத்தமே.

எனினும் இலங்கைப் படையினர் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றொழித்தபோது அதுபற்றி; கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை புனித பாப்பரசரிடம் முறையிட்டிருந்தால், ஐ.நா சபை பிரதிநிதிகளைச் சந்தித்து ஈழத் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டிருந்தால், கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையைத் தமிழ் மக்கள் திருத்தந்தையாகப் போற்றியிருப்பர்.

ஆனால் அவர் தமிழ் மக்கள் விடயத்தில் வாய்திறக்கவேயில்லை.

மாறாக, அரசியலமைப்பில் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்றே கேட்டிருந்தார்.

ஆக, தமிழர்களுக்கு சிங்களவராகவும் சிங்களவர்களுக்கு பௌத்தராகவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை செயற்படுகின்றார் என்பது தெட்டத் தெளிவாகிறது.

# சனிமுதல் மின்வெட்டு இருக்காது இன்றுமுதல் எரிபொருள் வழமைக்கு

## ஜனாதிபதியிடம் அதிகாரிகள் உறுதி

(கொழும்பு)

எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை முதல் நாடு முழுவதும் தடையின்றி மின்சாரம் வழங்க முடியும் என அதிகாரிகள் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மின்வெட்டு மற்றும் எரிபொருள் நெருக்கடி தொடர்பில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி தலைமையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அனைத்து பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கும் பணிப்புரை விடுத்தார்.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சகங்களின் அதிகாரிகளுடன் நீண்ட விவாதத்திற்குப் பின்னர் தாமதமின்றி எரிபொருளை இறக்குமதி செய்வது, எரிபொருள் இருப்புகளைப் பராமரித்தல் மற்றும் மின் உற்பத்திக்கான எரிபொருள் மற்றும் நிலக்கரியை வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் மார்ச் 5 முதல் மின்வெட்டு இருக்காது என அதிகாரிகள் ஜனாதிபதிக்குத் தெரிவித்தனர்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் எரிபொருள் விநியோகம் இன்று வியாழக்கிழமை முதல் வழமை போன்று ஆரம்பிக்கப்படும். எனவே பொதுமக்கள் அச்சமடைந்து எரிபொருள் சேகரிப்பதை தவிர்க்குமாறு அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

## உக்ரைனில் பணியாற்றிய 32 இலங்கையர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்

உக்ரைனில் பணியாற்றிவந்த 32 இலங்கையர்கள் அந்நாட்டின் எல்லை பகுதிகளில் அமைந்துள்ள 4 நாடுகளின் ஊடாக பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

துருக்கியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம் இதனைத் தெரிவித்துள்ளது.

மேலும் 30 இலங்கையர்கள் உக்ரைனில் மீதமிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 6 நாட்களில் 6 இலட்சத்து 60 ஆயிரம் உக்ரேனியர்கள் ஏதிலிகளாக அண்டை நாடுகளுக்கு தப்பிச்சென்றுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

## பளை அரசர்கேணியில் இளைஞன் சடலமாக மீட்பு

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அரசர்கேணி பகுதியில் இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அரசர்கேணி பகுதியில் குறித்த இளைஞனின் உறவினர் ஒருவரின் வீட்டிலேயே நேற்று இவ்வாறு சடலமாக காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக காணப்பட்டவர் பளை சோறன்பற்றை சேர்ந்த சுந்தரமூர்த்தி கோபிதாஸ் ஆவார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-316)

## பல்கலைக்கழக நடவடிக்கையை முழுமையாக ஆரம்பிக்கமுடியாது

கொரோனா வைரஸ் பரவும் அச்சுறுத்தல் காரணமாக இலங்கையின் அனைத்து பல்கலைக்கழக நடவடிக்கைகளையும் முழுமையாக ஆரம்பிப்பதற்கான திகதியினை உறுதியாக அறிவிக்க முடியாது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தற்போது பல்கலைக்கழக செயற்பாடுகள் 50 வீதம் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்டபேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மாத்திரம் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், அனைத்து பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகளையும் உடனடியாக முழுமையாக ஆரம்பிப்பது நடைமுறை சாத்தியமற்றது எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## 3,000 ரூபாவுக்கு மட்டும் எரிபொருள் நிரப்ப உத்தரவு

இலங்கையில் எரிபொருள் கையிருப்பு மிகக் குறைந்தளவே உள்ள நிலையில் வாகனம் ஒன்றிற்கு 3,000 ரூபாவுக்கு மேல் எரிபொருளை நிரப்ப வேண்டாம் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கடுமையான அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

எரிபொருள் நிரப்ப கான்கள் மற்றும் போத்தல்களை கொண்டு வருபவர்களை திருப்பி அனுப்புமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மோதல் ஏற்படாமல் இருப்பதை தவிர்க்க பொலிஸார் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர். (ம)

# சத்திய தரிசனம்



## கண் இரண்டும் வாய் ஒன்றும் ஏன்?

- பலாப்பழம் இருக்க, பலாக்காயை ருசிப்போமா? இனிமையான சொற்கள் இருக்க கடுமையான சொற்களைப் பிரயோகிக்கலாமா?
- அடுத்தவரை மகிழ்விப்பது அறம். அதற்காக நாம் பணம் தேடி ஓட வேண்டாம். நல்ல சொற்களே போதுமானது.
- கண்டவற்றுள், கேட்டவற்றுள் பாதியையே பகர வேண்டும் என்பதற்காகவே கண்இரண்டும், வாய் ஒன்றுமாக வார்த்தளித்தான்.
- தன்னைக் கல்லால் அடித்தவனுக்கும் இனிய கனியைத் தருகிறது மரம். நம்மைச் சொல்லால் அடிப்பவருக்கு கனிவான சொற்களைத் தரவேண்டும்.
- உள்ளத்தில் அன்பு இருந்தால் வார்த்தைகளில் இனிமை, பாலில் ஊறிய பழம்போல இருக்கும்.
- வாசிக்கத் தெரிந்தவன் வாசித்தால் புல்லாங்குழலில் கீதம் ஒலிக்கும். தெரியாதவன் ஊதினால் காற்றுதான் வரும். அறிஞர்களின் பேச்சில்தான் பொருள் இருக்கும்.
- எந்த ஒரு வார்த்தை இறை சிந்தனையில் ஒருவனை ஈடுபடுத்துமோ அதுதான் அவனுக்கு மந்திரம். மற்றவனுக்கு அந்த வார்த்தை பொருளற்றதாக இருந்தாலும் சரி. மனதை ஒருமுகப்படுத்துவதே மந்திரம்.
- ஆன்மிகத்தின் ஆரம்பப் பாடமே பேச்சைக் கட்டுப்படுத்துவது என்பதுதான். பேச்சு மனிதனுக்கு இறைவன் அளித்த படைக்கலன்கள். மற்ற மிருகங்களுக்குத் தன்னைக் காத்துக் கொள்ள விரைந்தோட வசதியான பாதங்களும், கூரான நகங்களும் மற்றும் கொம்புகளும், தந்தங்களும், அலகுகளும் அளித்த கடவுள் மனிதனுக்கு அளித்திருப்பது இனிமையான பேச்சு ஒன்றுதான். இதன்மூலம் எதிரியைப் பலமிழக்கச் செய்து எதிர்ப்புகளைக் களைந்து வெறுப்பின் பல்வகைத் தாக்குதல்களிலிருந்து தப்பி அவற்றை முறியடித்து மனிதனால் செயற்பட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 09

உரிய சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளுக்கமைய குழுவின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கென ஒத்துழைப்பு வழங்குவதற்காக ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தினதும் மாவட்ட செயலாளரின் தலைமையிலான ஓர் உபகுழு வீதம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நியமிக்கப்பட்டது.

**மாகாணசபை கலப்பு தேர்தல் தொகுதிகள் எல்லை நிர்ணயத்தின் பால் செல்வாக்குச் செலுத்துகின்ற சட்டம்.**

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்திற்கு (முதன்மை சட்டவாக்கத்திற்கு) 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட 3அ(1) முதல் 3அ(11) வரையிலான உட்பிரிவுகளில் உள்ள சட்ட ஏற்பாடுகளுக்கமையவும் ஜனாதிபதியினால் குழுவின் தவிசாளர் உள்ளிட்ட அங்கத்தினர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள நியமனக் கடிதங்களுக்கமையவும் இவ்வெல்லை நிர்ணய குழுவிற்குரிய பணிகளை ஆற்றுவதற்காக கையளிக்கப்பட்ட தத்துவங்களையும் பொறுப்புக்களையும் கீழ்வருமாறு விளக்க முடியும்.

**2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாணசபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் உப்பிரிவுகளில் உள்ள சட்ட ஏற்பாடுகளுக்கமையவும் குழுவின் அங்கத்தினர்களுக்கு விநியோகிக்கப்பட்ட நியமனக்கடிதங்களுக்கமையவும் இவ்வெல்லை நிர்ணய குழுவிற்குரிய பணிகளை ஆற்றுவதற்காக கையளிக்கப்பட்ட தத்துவங்களும் பொறுப்புக்களும் மிகத்தெளிவாக இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.**

**எல்லை நிர்ணயக் குழுவிற்குரிய தத்துவங்களும் பொறுப்புக்களும்**

(i) **தேர்தல் தொகுதிகளாகப் பிரித்தொதுக்குதல்**

2004 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவுக்கமைய மாகாண சபை அதிகார எல்லைகளுக்குள் அமையப் பெற்றுள்ள ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலிருந்தும் மாகாண சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தேர்தல்கள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஐம்பது சதவீதத்தை (50%) நேரொத்த உறுப்பினர் தொகையொன்றை தேர்ந்தெடுக்கத்தக்கவாறு மாகாணசபைத் தேர்தல் சட்டத்தின் 3அ(4) ஆம் உட்பிரிவில் காட்டப்பட்டுள்ள விடயங்களை கருத்திலெடுத்து, தேர்தல் தொகுதிகளாகப் பிரித்தொதுக்குதல் இக்குழுவின் பிரதான பணியாக இருந்தது.

அதற்கமைய ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தேர்தல் மாவட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர் எண்ணிக்கையில் 50% உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் பொறுப்பும் குழுவுக்குக் கையளிக்கப்பட்டது. குழுவின் பணிகளிலும் தேர்தல் தொகுதிகளை பிரிப்பதிலும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்களைக் காட்டுகின்ற சட்டத்திற்குரிய 3அ(4)ஆம் பிரிவின் பிரித்தெடுப்புகையொன்றும் ஏனைய முக்கியமான விடயங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன.

(ii) **தேர்தற்றொகுதிகளாகப் பிரிப்பதில் குழுவினால் கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள்**

நிர்வாக மாவட்டங்களைத் தேர்தற்றொகுதிகளாகப் பிரிப்பதில் பின்வரும் காரணிகள் குழுவினால் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும் என சட்டத்தில் கூறப்பட்டிருந்தது

அவை:

(அ) ஒரு நிர்வாக மாவட்டத்தின் ஏதேனும் பிரதேசத்தில், இன, மத அல்லது வேறு வகையான அக்கறைப் பிணைப்பினால் ஒன்று சேர்க்கப்பட்ட, ஆனால் அப் பிரதேசத்திலுள்ள பெரும்பான்மையினரான வாசிகளிலிருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இந்த அம்சங்களில் வேறுபடுகின்ற கணிசமான அளவினரான ஆட்கள் உள்ளனரெனக் குழுவுக்குத் தோன்றுமிடத்து, குழுவானது, அத்தகைய நிர்வாக மாவட்டங்களைத் தேர்தற்றொகுதிகளாகப் பிரிவிடலாம்.

(ஆ) அத்தகைய பிரிவிடுகையைச் செய்வதில், ஆணைக்குழு, பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்:-

(i)மாகாணத்திற்குள்ளான நிர்வாக மாவட்டங்களின் பல்வேறு தேர்தல் தொகுதிகளில் வதிகின்ற ஆட்களின் எண்ணிக்கையிலான அளவொவ்வாமையை மிகக் குறைவானதாக்குவதன் விருப்புத்தன்மை அத்துடன்,

(ii) தேர்தற்றொகுதிகளின் புவியியல்சார் மற்றும் பௌதீகச் சிறப்புக் கூறுகள்.

(இ) மேற்குறித்த அ பிரிவில் குறிப்பாக காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்பால் கவனம் செலுத்த ஏதேனுமொரு நிர்வாக மாவட்டத்திற்கு ஓர் உறுப்பினரிலும் பார்க்க அதிகமான எண்ணிக்கையினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய தேர்தல் தொகுதிகளை உருவாக்குதல் பொருத்தமென குழு கருதுகின்றவிடத்து, குழு பல அங்கத்தவர் தேர்தல் தொகுதிகளையும் குறித்தொதுக்குதல் வேண்டும்.

(ஈ) நிர்வாக மாவட்டமொன்றில் வேறு பிரிக்கப்படுகின்ற ஒவ்வொரு தேர்தல் தொகுதியையும் இனங்காண்பதற்காக அவையொவ்வொன்றிற்கும் இலக்கமொன்றையும் பெயரொன்றையும் குறித்தொதுக்கவும் அவ்வொவ்வொரு தேர்தல் தொகுதியிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரித்துள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதும் குழுவின் பொறுப்பாகும்.

(உ) குழுவினால் அதன் பொறுப்புக்கள் ஆற்றப்படுகையில் பின்பற்றப்பட வேண்டிய நடபடிமுறையை தீர்மானிப்பதற்கும் பொறுப்புக்களை ஆற்றுகையில் தேவையான அலுவலர்கள், நிபுணர்கள், நுட்பக்குழுக்கள் மற்றும் உபகுழுக்களை நியமனம் செய்வதற்கும் குழுவிற்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

(ஊ) குழு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து 4 மாதத்திற்குள் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் தொடர்பான அறிக்கையை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு கையளித்தல் வேண்டும்.

**குழுவின் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படல்**

குழுவின் அறிக்கை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், இரண்டு வாரங்களுக்குள் அதனை அமைச்சர் பாராளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 2/3 இற்கு குறையா எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்களின் வாக்கினால் நிறைவேற்றிக்கொள்வதற்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

அவ்வாறு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்ததன்பின் 2/3 வாக்குகளால் அங்கீகரிக்கப்படாவிடத்து அவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தேர்தல் தொகுதிகளின் இலக்கங்கள், அவற்றின் பெயர்கள், எல்லைகள் தொடர்பாக மீளாய்வு செய்வதற்காக 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தின் 4(12) முதல் 4(14) வரையிலான உட்பிரிவுகளில் காட்டப்பட்டுள்ளவாறு மீளாய்வுக் குழுவொன்று பிரதமரின் தலைமையில் பாராளுமன்றத்தின் சபாநாயகரினால் நியமனம் செய்யப்படும்.

(முன்னர் கூறியதுபோல பாராளுமன்றத்தில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது அது தோற்கடிக்கப்பட்டது. இதனால் மீளாய்வுக் குழுவொன்று பிரதமரின் தலைமையில் பாராளுமன்றத்தின் சபாநாயகரினால் நியமனம் செய்யப்பட்டது.)

**எல்லை நிர்ணயம் மீளாய்வுக் குழுவின் கடமை**

சபாநாயகரினால் நியமனம் செய்யப்படுகின்ற இம் மீளாய்வுக் குழு பிரதமரின் தலைமையிலான பிரதான இனக் குழுமங்களைப் பிரதிநிதிதுவப்படுத்துகின்ற ஐவரை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அக்குழுவின் அறிக்கையை இரண்டு மாதங்களுக்குள் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டுமென சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளது. (ஆனால் அக்குழு இற்றைவரையில் மீளாய்வு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை).

உரிய மீளாய்வுக் குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர், உடனடியாக ஜனாதிபதியால் தேர்தல் தொகுதிகளின் பெயர்களும் எல்லைகளும் பிரகடனம் செய்யப்படல் வேண்டும்.

**மாகாண சபைக்கான தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்**

மாகாணங்களுக்கு தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையிலிருந்து, கடைசியாக நடந்த (2012 ஆம் ஆண்டின்) சனத்தொகைக் கணிப்பீட்டுக்கு அமைவான சனத்தொகையை அடிப்படையாகக்கொண்டு 2017 இல் ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தேர்தல்கள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டு அது எல்லை நிர்ணயக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 பேர்...

நாட்டில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 16,267 ஆக உயர்வடைந்துள்ளது. (ம)

## 7½ மணித்தியால...

காலப் பகுதிக்குள் 5 மணி நேரம் மின்வெட்டும் மாலை 6 மணிமுதல் இரவு 11 மணிவரையான காலப்பகுதிக்குள் 2½ மணி நேர மின்வெட்டு அமுல்படுத்தப்படும் எனவும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம)

## சிறுநீரக மாற்று...

துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா வைத்தியசாலையில் மூளைச் சாவடைந்த இறம்பைக்குளம், வவுனியாவைச் சேர்ந்த சிவபாலன் சிவரூபன் (வயது-42) என்பவரின் சிறுநீரகம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்களினால் 25.02.2022 அன்று மற்றுமொரு சிறுநீரகம் பழுதடைந்த நோயாளிக்கு சிறுநீரக மாற்று சிகிச்சை மூலம் வெற்றிகரமாக பொருத்தப்பட்டது.

இவர்களைப்போல் ஏனையோரும் முன்வருவராயின் நோயாளிகள் பலர் நீண்டகாலம் வாழ உதவி செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பிசிஆர் பரிசோத...

என யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி கே.நந்தகுமாரன் அறிவித்துள்ளார்.

சுகாதார தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளமையால், வெளிநாடு செல்வோருக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (ம-33)

## திருநெல்வேலி...

சிவராத்திரி பூஜைக்கு சென்றுவிட்டு ஒரே மோட்டார் சைக்கிளில் 3 இளைஞர்கள் பலாலி வீதி நோக்கி பயணித்துக் கொண்டு இருந்துள்ளனர்.

இதன்போது பலாலிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பட்டா வாகனத்துடன் இவர்கள் மோதுண்டதாக கோப்பாய் போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் இளைஞன் உயிரிழந்த நிலையில் மேலும் இரண்டு இளைஞர்கள் காயங்களுக்கு உள்ளாகி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துடன் தொடர்புடைய பட்டா வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-18,33,104)

## ஈஸ்டர் தாக்கு...

கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை நேற்று புதன்கிழமை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட்டை சந்தித்துப் பேசினார்.

ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத் தொடரில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இலங்கை அரசின் நீதி விசாரணை மீதான நம்பிக்கை தகர்ந்துவிட்டதாக தெரிவித்துள்ள பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் எமக்கு நீதி வேண்டும் என ஐ.நா உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதற்காக வத்திக்கான் அனுமதியை நாடிய அவர், வத்திக்கான் சென்று பாப்பரசர் பிரான்சிஸை சந்தித்துப் பேசிய பின்னர் ஜெனிவா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நவாலியில்...

பஸ்தர் ஒருவர் காயமடைந்துள்ளார். தாக்குதலை நடத்துவதற்கு வந்த வாள்வெட்டுக் கும்பலில் ஒருவரை வீட்டார் மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நவாலி வடக்கு திருச்சபை வீதியில் உள்ள வீடொன்றினுள் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் அத்துமீறி நுழைந்த வாள்வெட்டுக் குழு ஒன்று வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பட்டா ரக வாகனத்தின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தியதுடன் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கி வீட்டிலிருந்த இளைஞனின் மீது தாக்குதல் நடத்த முற்பட்டவேளை இளைஞன் தப்பித்த நிலையில் குறித்த இளைஞனின் தந்தையான நடராசா அருள் றொபின்சன் (வயது-48) என்பவர் வாள்வெட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

இதனையடுத்து அயலவரின் உதவியுடன் வாள்வெட்டுக் கும்பலைச் சேர்ந்த ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்ட நிலையில் குறித்த நபரிடமிருந்து வாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபரை அவர்கள் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ம-18,33,104)

## நாடு முழுவதும்...

யாலங்கள் மக்கள் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது.

இந்நிலையில், பல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில், பொறுமையை இழந்த மக்கள் தமது எதிர்ப்பினை வெளியிட்டனர்.

அம்பாந்தோட்டை, ரன்ன வாடிகல எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசலை பெற்றுக்கொள்ள பல நாட்கள் முயற்சி செய்த மக்கள் அது கிடைக்காமையினால் இறுதியில் நேற்றுக் காலை மாத்தறை - வெல்லவாய வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், மாவத்தகம - பீலிகட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசலை பெற்றுக் கொள்வதற்காக பல நாட்கள் முயற்சி செய்த மக்கள் நேற்று குருநாகல் - கண்டி பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டனர்.(ம)

## ஐ.நா...

ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை தொடர்பான விசேட விவாதம் இன்று 3ஆம் திகதி இடம்பெறும். இதுதொடர்பான தீர்மானத்திற்கு ஆதரவாக மனித உரிமை பேரவையின் 47 உறுப்பு நாடுகளில் 29 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன.

இலங்கைதொடர்பான விவாதம் மேலும் ஒரு நாள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## உக்ரை...

கும் முன், இலங்கையை தாக்கியிருப்பார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

ரஷ்ய அதிபர் புடினை

அரசிலிருக்கும் சிலர் ஜனாதிபதி கோட்டாவுடன் ஒப்பிட்டுக் கருத்து வெளியிட்டமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று அரசாங்கத்தால் பொருளாதாரத்தை நிர்வகிக்க முடியவில்லை எனவும், ஏழு மூளையில்லாதவர் நிதி அமைச்சராகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இன்று 60 இலட்சம் மட்டுமல்ல 225 இலட்சம் பேர் தண்டிக்கப்படுவதாகவும் எனவே இந்த அரசாங்கம் உடனடியாக மாற்றப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த அரசாங்கத்தை உடனடியாக மாற்றாவிட்டால் நாடு எஞ்சியிருக்காது எனவும், நாட்டை ஆளக்கூடிய எவருக்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 02/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1218
வெற்றி இலக்கங்கள்: மிதுனம் 3 6 3 5 4 5

### மெகா பவர்

திகதி 02/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1042
Q 06 | 14 25 26 72

### HANDAHANA

சீட்டிழுப்பு திகதி 2022.03.02
சீட்டிழுப்பு இலக்கம் 0035
மகரம் 06 36 47 55 மகரம்

### மஹஜன சம்பத

திகதி 2022/03/02
சீட்டிழுப்பு இலக்கம் 4694
J 4 4 4 0 2 5

### கொவிசெத

சீட்டிழுப்பு திகதி 02.03.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2989
M 02 08 65 67

### தன நிதானய

திகதி - 2022.03.02
சீட்டிழுப்பு இலக்கம் - 724
K 17 50 74 82

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1671 | நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 02.03.2022 | தினம் புதன்
Q 12 14 38 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் : ரூபா 50,332,078/-

### சனிதா

புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.02
சீட்டிழுப்பு இல: 3833
ரூ.4,892,040/-
வெற்றி இலக்கங்கள் 04 17 35 53 E

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 7,516,304/-
திகதி 02.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3383
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 13 17 36 40 கன்னி
9 5 6 9 9 8 8
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,578,040/-

### லக்பிம / 12

சீட்டிழுப்பு வாரம் 847
பச்சை
2022.03.02 புதன்கிழமை
B 09 28 37 56 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 217,862,431/-

### ஜயோதா Jayoda

சீட்டிழுப்பு வாரம் 1816
சீட்டிழுப்பு திகதி 02.03.2022
வெற்றி இலக்கங்கள் 08 16 38 51 G
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 32,044,736/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

### அத கோடிபதி

புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.02
சீட்டிழுப்பு இல: 1497
ரூ.4,063,240/-
01 19 39 51 Q

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 60 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- ஏ9 வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரம்
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 8 கி.மீ தூரம்
- lanka ashok leyland வாகன விற்பனை நிலையத்திற்கு அருகாமை
- 18 அடி பாதையுடன் இயற்கையான சூழல்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம். (10448)

குரு - 077 623 4204, 077 288 0152
076 658 3621, 077 911 6983


# ரஷ்யாவிடம் இருந்து 300 மில்லியன் கடன்

## இலங்கை கோரியது

(கொழும்பு)

ரஷ்யாவிடம் இருந்து 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை கடனாக கோரியுள்ளது.

மசகு எண்ணெய், எரிவாயு மற்றும் நிலக்கரி ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்காக இவ்வாறு கடன் கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் - ரஷ்யா இடையே போர் இடம் பெற்றுவரும் நிலையில் இலங்கை இவ்வாறு கடன் கோரியுள்ளது. (ம)

# பேராசிரியராக பதவி உயர்வு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிவானந்தமூர்த்தி சிவேசன் முகாமைத்துவப் பேராசிரியராக 2019 ஆம் ஆண்டில் இருந்து பதவி உயர்வு பெற்றுள்ளார்.

புத்தூரைச் சேர்ந்த பேராசிரியர் சிவேசன், புத்தூர் சோமஸ்கந்தா மற்றும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிகளின் பழைய மாணவர் என்பதுடன் தனது கலாநிதிப் பட்டத்தை அவுஸ்திரேலிய பெடரல் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார். இவர் யாழ். பல்கலைக்கழக மூத்த பேராசிரியர் சிவானந்தமூர்த்தியின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)


## VCM INSTITUTE

Near the Manogara Junction, KKS road, Jaffna.

### A/L 2021 REPEAT

இணைந்த கணிதம்

B.Raveendran B.Sc

ஆரம்பம் - 07.03.2022 திங்கள் காலை 7.30 மணி (10393)

- 077 833 8394

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-3869)

0768226240 DHL

## சேல்ஸ்மான் தேவை

எமது புடைவை நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள விற்பனையாளர் தேவை. (10455)

சிவகணேசன் ரெக்ஸ்

இல. 41, பெரியகடை, யாழ்ப்பாணம்.

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10391)

076 825 7716 (ஆகாஸ்)


## காணி விற்பனைக்கு

கோப்பாய் இராசபாதையில் 3 பரப்பு உறுதிக்காணி 12 அடிப்பாதையுடன் இராசபாதையையும் பருத்தித்துறை வீதியையும் இணைக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

வீடு கட்ட, தோட்டச் செய்கை என்பவற்றிக்கு உகந்த காணி விலை பேசித் தீர்மானிக்கப்படும். (தயவுசெய்து தரகர்கள் தொடர்புகொள்ள வேண்டாம்.) ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். காணி பார்ப்பதாயின் தொடர்பிலக்கத்திற்கு தொடர்பு கொண்டு வரவும். (10413)

காணி உரிமையாளர் : 076 096 0473


# மரண அறிவித்தல்



## காசிப்பிள்ளை பரமானந்தம்

(உரிமையாளர் - சங்கானை காசிப்பிள்ளை அன் சன்ஸ்,
உரிமையாளர் - லக்ஷ்மி டிஜிற்றல் கலர் லாப்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1947.12.27 | 2022.03.02 |

அராலி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை பரமானந்தம் அவர்கள் நேற்று (02.03.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் தனலஷ்மியின் (ராணி) அன்புக் கணவரும் நிசந்தி (கனடா), நிரஞ்சன் (லக்ஷ்மி டிஜிற்றல் கலர் லாப், சங்கானை), நிரஞ்சினி (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுரேஸ் (கனடா), பவானி (ஆசிரியை - யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), முகுந்தன் (லக்ஷ்மி டிஜிற்றல் கலர் லாப், மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற அருளம்பலம் (அருளானந்தா புடைவையகம், சங்கானை) மற்றும் மனோன்மணி, பரஞ்சோதி (காசிப்பிள்ளை அன் சன்ஸ், சங்கானை), ஜெகதேவி, இராஜேஸ்வரி, மகேஸ்வரன் (காசிப்பிள்ளை அன் சன்ஸ்), கலோஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரவின் (கனடா), ஜனனி (கனடா), தரணிகா (சங்கானை), தஸ்மிகா (சங்கானை), தக்சஜன் (மட்டக்களப்பு), தர்சிகன் (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.03.2022) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி வீதி,
சங்கானை.

தகவல்: குடும்பத்தினர்

(10445) நிரஞ்சன் (077 290 8787), மகேஸ்வரன் (076 655 1274), முகுந்தன் (077 132 1771)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org